தெணியான்

# தளிர்

புரட்டாதி - மார்கழி — 1984

விலை: ரூபா 4/-

★ இலங்கை இந்திய நிலை

★ புத்தி ஜீவிகள்

★ மலையக உண்மைகள்

★ வட, கிழக்கில் உணவு

★ மேற்கு சகரா விடுதலை

★ முதலுதவி

" அஞ்சினர்க்குச் சதாமரணம்
அஞ்சாத நெஞ்சத்து ஆடவனுக்கு ஒரு மரணம்"

---

''நேற்றைய துயரங்கள்
நெஞ்சினில் கனக்க — இம் மண்ணை
நேசித்தனர் இவர்கள்
அதனுல்
இளமையில் மரணித்துப் போயினர்.''

---

தெணியான்

# தளிர்

திரள்: 2 இல: 3

புரட்டாதி—மார்கழி 1984

விலை ரூபா 4/-

## உள்ளே

● இலங்கைப் பிரச்சனையும் இந்தியாவின் —நிலையும்

● தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும் —புத்தி ஜீவிகளும்

● இனப் பிரச்சனையும் தெற்கில் நெருக்கடியும்

● தோட்டத் தொழிலாளர் பற்றிய —பொய்மைகளும் உண்மைகளும்

● உணவு உற்பத்தி

● மேற்கு சகராவின் விடுதலைப் போராட்டம்

● களத்தில் புகுந்தவள் பற்றி அவள் அன்னை

● அவசர தேவைக்கு அவசியமானவை

## தொடர்புகட்கு

'தளிர்'
ஆசிரியர் குழு
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

## அச்சிடப்பட்டது

யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகம்

## மக்களின் அவலம்

எம்மைச் சூழவும் அழிவுகள்; அவலங்கள் சிப்பாய்களின் துப்பாக்கிகளில் இருந்து பாயும் உலோகக் குண்டுகள் பச்சைக் குழந்தையின் நெஞ்சினையும் பிளந்து செல்கிறது. பல கோடிக் கணக்கான சொத்துக்கள் பாழாக்கப்பட்டு வருகின்றன. நாளாந்தம் உழைத்து வாழும் தொழிலாளர் மிக மோசமான பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். உயிரைத் துச்சமாக மதித்து பெண்கள் சிறுவர் உட்பட பலர் அகதிகளாக இந்தியா சென்ற வண்ணமிருக்கின்றனர்.

அரசாங்க ஊழியர், சிறு கைத்தொழில் செய்வோர், உற்பத்தியில் ஈடுபடுவோரின் வேலை நேரம் குறைந்துள்ளது. எரிபொருள் இன்மையால் விவசாய உற்பத்திகள் குறைந்து விட்டன. மீன் பிடித் தொழில் மூழ்கடிக்கப்பட்டு விட்டது. பாடசாலைகள் அகதி முகாம்களாகின்றன. பாலங்கள் சிதைக்கப்பட்டு மக்கள் நடமாட்டம் பூரணமாகக் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இளைஞர்கள் வேட்டையாடப் படுவது தொடர்கிறது. பாதிரியாரும் பயங்கரவாதியாக்கப்பட்டு, புனித ஸ்தலங்கள் அவமதிக்கப்படுகின்றன—அரசாங்கம் தன் பணிகளைச் செவ்வனே செய்கிறது!

மக்களின் அவலம் இதனுல் மட்டுமல்ல. விடுதலை என்ற பெயரில் விபரீதங்கள் பல பல. கொள்ளைகளையும் கொலைகளையும் சில விடுதலை தாபனங்கள் செய்கின்றன. பாடசாலை உபகரணங்கள் சூறையாடப்படுவது மட்டுமன்றி பாடசாலைக் கதிரை, மேசை, கண்ணுடிகளும் அடித்து உடைக்கப் படுகின்றன. சுழிபுரப் புதைகுழியில் எண்மரின் சடலங்கள். பதினறு வயதுச் சிறுவனும் படுகொலை செய்யப்பட்டுள்ளான். பைத்தியக்காரிக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

விடுதலைத்தாபனங்களுக்கிடையிலான மோதல்களும், அடிக்கடி நிகழும் போராளிகளின் மரணங்களும், மக்கள் மீதான அரச பயங்கரவாதிகளின் வெறித்தாக்குதல்களும் போராளிகளின் அண்மைய தாக்குதல்கள் ஓரளவு நம்பிக்கையை ஊட்டினும் பொதுவாக மக்களை அவநம்பிக்கை கொள்ளச் செய்கின்றன.

ஒன்று மட்டும் உண்மை. போராளிகளை விட பொதுமக்கள் அதிகம் கஷ்டப்படுகின்றனர். இந்த நிலை தொடருமாயின் மக்களின் கல்லெறியை எதிர்நோக்க வேண்டி வரும். விடுதலை தாபனங்கள் சிந்திக்க வேண்டும்.

# இலங்கைப் பிரச்சினையும் இந்தியாவின் நிலையும்

"சர்மா"

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையினையும், இலங்கையிற் சிங்கள-பௌத்த பேரினவாதத்தினையும் அதற்கு அடிப்படையான பௌத்த நிறுவனத்தையும் பற்றி விளங்கிக் கொள்ளாமல் இலங்கைத் தீவின் எதிர்காலத்தைப் பற்றி விளங்கிக் கொள்ள முடியாது. தமிழ்மக்கள் விடுதலைப் போராட்டத்தைச் சரியான பாதையிற் திட்டமிட்டு முன்னேற்றிச் செல்வதற்கு இவற்றைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் இவை அனைத்தையும் இணைத்து விளக்க எடுக்கும் ஓர் முயற்சியாகவே இக் கட்டுரை அமைகின்றது.

முதலில் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் நிலைமையினையும், இலங்கைத்தீவு சம்பந்தமான அதன் கொள்கையினையும் நோக்குவோம். பிரித்தானியர் தமது நலனின் பொருட்டு இந்தியாவைப் பாதுகாப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டே இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். எனவே இந்தியா சுதந்திரம் அடைந்ததும் எவ்விதப் போராட்டமும் இல்லாமல் பிரித்தானியர் சுதந்திரம் இலங்கைக்கும் வழங்கினர். இது இந்தியா பொறுத்து இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை விளக்கி நிற்கும் ஓர் முக்கிய உதாரணமாகும். சுதந்திர இந்தியா பாதுகாப்புச் சம்பந்தமாகப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியது. பிரித்தானியர் ஆதிக்கத்தின் கீழ் இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்கிய பாகிஸ்தான் சுதந்திரத்துடன் இந்தியாவிலிருந்து பிரிந்தது. சுதந்திரம் பெற்ற உடனடியாகவே இந்தியா-பாகிஸ்தான் யுத்தம் உதயமாகியது. இவ்வாறு இந்தியாவிற்கு வடமேற்கே இந்தியாவிற்குப் பிரச்சினையாகப் பாகிஸ்தான் என்னும் அரசு அமைந்து கொண்டது.

மேலும் வரலாற்றில் ஒருபொழுதும் இந்தியாவின் மீது படையெடுப்பு நிகழாத பகுதியாகிய வடகிழக்கிலிருந்து சீனா 1962—ஆம் ஆண்டு இந்தியா மீது படையெடுத்தது. பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இந்தியாவிற்குக் கிழக்கே இருந்து வந்த இன்றைய பங்களாதேஷ் (அன்று கிழக்குப் பாகிஸ்தான்) பிரதேசமும் கிழக்கே இந்திவிற்குப் பிரச்சினையுள்ள ஒரு பிரதேசமாக அமைந்திருந்தது. இப் பகுதியிற் பாகிஸ்தானிய இராணுவத்துடன் இந்தியா ஓர் பெரும் போரில் ஈடுபட்டதென்பது குறிப்பிடத் தக்கது. பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்ததன் மூலம் இந்தியாவிற்கு இதனாலான நெருக்கடி தணிந்துள்ள போதிலும் இந்தியாவிற்கும் பங்களாதேஷிற்கும் இடையே எல்லைப் புறப் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இந்தியாவைச் சூழ இவ்வாறான பிரச்சினைகள் இருக்கும் இத்தகைய நிலையில் இந்தியாவிற்குத் தெற்கே இந்தியாவின் பாதுகாப்புப் பொறுத்து பிரதான மையத்தில் அமைந்திருக்கும் இலங்கை இந்தியாவிற்குப் பிரச்சினையற்ற ஓர் அரசாக அமைந்திருக்க வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பமாகும்.

இதனால் இந்தியா, இலங்கை பொறுத்துத் தனது கொள்கையைப் பின்வருமாறு வகுத்துள்ளது. அதாவது இந்தியாவிற்குப் பாதகமற்ற போக்கை இலங்கை உள்நாட்டுரீதியாகவும் வெளி நாட்டு ரீதியாகவும் கடைப்பிடிக்க வேண்டும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுடன் முரண்படாதவாறும் அதே வேளை எந்தவொரு வெளிநாடும் இலங்கையிற் தமது செல்வாக்கைச் செலுத்த முடியாதவாறும் (அது அமெரிக்காவாக இருந்தாலென்ன சோவியத் யூனியனாக இருந்தாலென்ன இந்தியா விரும்பாது.) இலங்கை இருக்க வேண்டும். இவ்வாறு இலங்கையைத் தனது கட்டுப்பாட்டை மீறாத நாடாக வைத்திருப்பதற்கு இந்தியா மூன்று விதமான திட்டங்களை வைத்திருக்கின்றது. அவையாவன

1) இலங்கையுடன் சுமூக உறவுகளைக் கையாள்வதுடன் இலங்கை அரசுக்கு உதவிகளைச் செய்தேனும் இந்தியாவின்

செல்வாக்குக்குரிய பகுதியாக வைத்திருத்தல். உதாரணமாக 1971-ம் ஆண்டு ஜே.வி.பி ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபட்டபோது பதவியிலிருந்த அரசாங்கத்திற்கு ஆயுத உதவி, படை உதவி போன்ற சகல உதவிகளையும் வழங்கி ஜே. வி. பி. ஐத் தோற்கடித்தது. இவ்வாறு ஜே.வி.பி க்கு எதிராக இந்தியா உதவி செய்தமைக்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று ஜே.வி.பி உள் நாட்டு ரீதியாக இடது சாரிக் கொள்கையை உடையதும், மற்றயது வெளிநாட்டு ரீதியாக இந்தியா எதிர்ப்புவாதக் கொள்கையை உடையதுமாகும்.

2) இலங்கை அரசாங்கத்திற்கு உதவிகளைச் செய்வதன் மூலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியாது போனால் இலங்கையிற் பதவியில் இருக்கும் அரசிற்குப் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கி அதன் மூலம் இந்திய அரசிடம் இலங்கை அரசைப் பணிய வைத்தல் என்பதாகும். இன்றைய சூழ்நிலையில் (1983-85) இந்தியா இத்தகைய திட்டத்தையே செயலாக்குகின்றது.

3) இவ்விரண்டு திட்டங்களினாலும் இலங்கையைக் கையாள முடியாது போகும் போது, இலங்கையால் இந்தியாவிற்கு நெருக்கடி முற்றும் பட்சத்தில் படையெடுப்பின் மூலம் இலங்கையைத் தனது சொல்லைக் கேட்க வைப்பதே இந்தியாவின் இறுதித் திட்டமாக இருக்கலாம்

இன்றைய சூழ் நிலையில் தென்னாசியாவில் இந்தியாவின் முதன்மை (தலைமை) என்ற அடிப்படையிலேயே இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை வகுத்துள்ளது. தென்னாசியாவில் அமெரிக்காவைத் தோற்கடித்தல் என்னும் அடிப்படையில் இங்கு இந்தியாவின் முதன்மையை சோவியத் யூனியன் ஏற்றுள்ளது. அதேவேளை வல்லரசுச் சமபலக் கொள்கையைப் பொறுத்து சோவியத்தின் நலன்களைப் பேணக் கூடியவாறு இந்தியா நடந்து கொள்ள வேண்டுமென்பதும் இவ்விரு அரசுகளுக்குமிடையேயுள்ள அடிப்படை விளக்கமாகும். இவற்றின் அடிப்படையில் இலங்கைப் பிரச்சினை பொறுத்து இந்தியாவின் தீர்மானமே சோவியத் யூனியனின் தீர்மானமுமாகும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவுடன் நேரடியாக மோதி வெற்றியீட்ட முடியாதென்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும். 1976-ஆம் ஆண்டு பங்களாதேஷ் பிரச்சினையில் அமெரிக்காவின் 7வது கப்பற்படை வங்காளவிரிகுடாவிலிருந்து திரும்பிப் போனமை இதற்கோர் உதாரணமாகும். ஆயினும் இந்தியாவைச் சூழவுள்ள நாடுகள் மூலமும், அதேவேளை இந்தியாவுக்குள்ளிருக்கும் தனக்குச் சாதகமான சக்திகள் மூலமும் இந்தியாவிற்குத் தலையிடியினை ஏற்படுத்துவது அமெரிக்காவின் கொள்கையாகும்.

இந்த வகையில் 1977-ஆம் ஆண்டு இலங்கையில் பதவிக்கு வந்த ஐ. தே. க. அரசாங்கம் அமெரிக்க சார்பு வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்துடன் தனது கதவுகளை மேற்கத்தேச ஏகாதிபத்தியத்திற்குத் திறந்து விட்டது. இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய வெளியுறவுக் கொள்கையையும், இங்கு அமெரிக்க செல்வாக்கு வளர்வதையும் இந்தியா விரும்பவில்லை. இதே வேளை 1970 களில் ஆரம்பத்தில் உருப்பெறத் தொடங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் ஐ.தே.க. ஆட்சியில் உக்கிரமடையத் தொடங்கியது. தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடூரமான இன ஒடுக்குமுறை இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் எதிரொலிக்கத் தொடங்கியது.

இத்தகைய சூழ்நிலையில் இந்தியா இலங்கையில் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளின் செல்வாக்கு வளர்ச்சியடைவதைத் தடுப்பதற்கும, இலங்கை அரசு இந்தியாவின் தலைமையை ஏற்க வைப்பதற்கும் ஏற்றவகையில் இலங்கையில் எழுந்த இனப்பிரச்சினையைக் கையாளத் தொடங்கியது. இலங்கைத்தீவு இரு அரசுகளாகப் பிரிவதை இந்தியா உண்மையில் விரும்பவில்லை. இலங்கைத்தீவு இரு அரசுகளாக இருப்பதை விட ஒரு அரசாக இருக்கவைத்து அதனைக் கையாள்வதே ஒப்பீட்டு நிலையில் இந்தியாவின் எதிர்கால நலனுக்குக் சாதகமானது. எனவே இந்தியா தமிழீழக் கோரிக்கையை ஆதரிக்காது தமிழ் மக்களின் பிரச்சினையை தனது நலனுக்குகந்த வகையில் ஓரளவு தீர்த்து வைப்பதும், தனது தலைமையை இலங்கை அரசு ஏற்கவைப்பதுமே இந்தியாவின் பிரதான நோக்கமாய் அமைந்தது.

இந்தியா இக் குறிப்பிட்ட நோக்கு நிலையில் இருந்து

கொண்டு 1983 ஆம் ஆண்டு யூலைமாதம் இலங்கையில் இடம் பெற்ற மிகப் பாரிய தமிழின ஒழிப்பு கலவரத்தின் போது இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் பின்வருமாறு கோரினார். இலங்கை அரசுக்கு இந்தியா படை உதவியாயினும் செய்யலாம் என்னும் அர்த்தத்தில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவிடம் எத்தகைய உதவி உங்கட்கு வேண்டும் என்று கோரினார். இந்தக்கட்டத்தில் கலவரத்தை அடக்க இலங்கை அரசு இந்தியாவின் படை உதவிகளைப் பெற்றிருந்தால் அதில் இந்யாவின் தலைமையை இங்கு நிலைநாட்ட இந்தியாவிற்கு உதவியாய் அமைந்திருக்குமென்பது இந்தியாவின் நோக்கமாகும். இலங்கை அரசு இந்தியா கருதியதான அவ்வாறான உதவிகளைக் கேட்காமல் மருந்துவகை மற்றும், அகதிகளை ஏற்றிச் செல்வதற்கான கப்பல் போன்ற உதவிகளையே சாட்டுக்குப் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தைப் பணிய வைப்பதற்கு இந்தியா இரண்டு முக்கிய திட்டங்களை வகுத்துக் கொண்டது. ஒன்று சர்வதேச ரீதியில் இலங்கையைத் தனிமைப் படுத்துதல், மற்றையது தமிழர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இயக்கங்களைப் பெருக்கவைப்பதற்கான அடிப்படை வசதிகளைச் செய்வதன்மூலம் உள்நாட்டு ரீதியில் இலங்கை அரசுக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்துவதன் வாயிலாக இலங்கை அரசை இந்தியாவிடம் பணியவைத்தல் என நம்பலாம். சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்பட்ட சூழ்நிலையில் ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் பெருகுமாயின் அது இலங்கை அரசுக்குப் பெரும் தலையிடியாகவே அமையும். அந்த நெருக்கடியைத் தாங்கமுடியாமல் இலங்கை அரசு இந்தியாவிடம் பணியும் என இந்தியா கணிப்பிட்டிருக்கலாம்.

இலங்கையிலிருந்து அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளை பின்வாங்க வைப்பதற்கான நடவடிக்கைகளுள் ஒன்றாகவே மாக்கிரட் தட்சருடனும், றீகன் நிர்வாகத்துடனும் இந்தியப் பிரதமராயிருந்த இந்திராகாந்தி கடிதத்தொடர்புகளையும், மற்றும் இராஜரீகத் தொடர்புகளையும் இலங்கை சம்பந்தமாக மேற்கொண்டிருந்தார். பொதுவாக இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக அமெரிக்காவுடன் சுமுகமான நடவடிக்கைகளைக் கையாள்வதன் மூலம் அமெரிக்காவை இலங்கையிலிருந்து பின்வாங்கும் நடவடிக்கைகளை எடுக்கவைக்க இந்தியா முயற்சிகளைச் செய்துவந்துள்ளது. ராஜீவ் காந்தியின் ஆட்சியின் கீழ் இந்தியாவில் அமெரிக்காவிற்குச் சில பச்சை விளக்குகள் தென்படுகின்றன. இராஜதந்திர நோக்கங்களும் சில பொருளாதாரத் திட்டங்களும் இதற்குக் காரணமாகும். இந்திய–சோவியத் உறவை உடைக்கமுடியாது போனாலும் அதற்கு ஒரு ஆப்பு ஆவது வைத்துவிடவேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது. இது ஒரு இலகுவான விடயமல்ல. இலங்கைப் பிரச்சனை சம்பந்தமாக இந்தியாவுடன் மோதி அமெரிக்கா வால் வெற்றியீட்ட முடியாதென்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும். மேலும் மேற்கூறிய வேறு அநுகூலங்களின் அடிப்படையிலும் இலங்கையிலிருந்து அமெரிக்கா சற்று பின்வாங்குவது அதற்குப் புத்திசாலித்தனம் போல தெரிகின்றது. ''எந்த ஒரு வல்லரசும் இந்தியாவிற் தனக்கு ஏற்படக் கூடிய நலனுக்காக இலங்கையை இந்தியாவிற்கு விற்கத் தயாராக இருக்கும்'' என்ற கருத்தை நாம் கருத்தில் எடுக்கத் தவறக் கூடாது. இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக இன்றைய நிலையில் அரைகுறை அரசியற் தீர்வுக்கு வருவது அமெரிக்காவிற்கு நன்மை அளிக்கக்கூடியது. எனவே தான் இலங்கை அரசை அரைகுறை அரசியல் தீர்வுக்கு வருமாறு அமெரிக்கா வற்புறுத்துகின்றது. ஆனால் ஆட்சியாளர் அவ்வாறான தீர்ப்புக்குக் கூட வரமுடியாத சூழ்நிலைமை பின்பு விளக்கப்படும். பொதுவாகப் பார்க்குமிடத்து இலங்கையைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இந்தியா கணிசமான வெற்றியினை ஈட்டியுள்ளதென்றே குறிப்பிடலாம்.

இந்தியாவின் இரண்டாவது நடவடிக்கை இலங்கை அரசுக்கு உள்நாட்டு ரீதியாக நெருக்கடியை ஏற்படுத்துதல். ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் திடீரெனப் பெருப்பதன் மூலம் இலங்கை அரசு தாங்கமுடியாத நெருக்கடிக்குள்ளாகி இந்தியாவிடம் பணியும் என்பது இந்தியாவின் எதிர்பார்க்கையாகும். ஆயுதம் தாங்கிய இயக்கங்களை விரிவடையவைப்பதில்இந்தியாவிற்கு இரண்டு தந்திரோபாயங்கள் உண்டு. முதலாவது தந்திரோபாயம் இவ்வியக்கங்களின் விரிவ

(தொடர்ச்சி 32-ம் பக்கம்)

# தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும் புத்தி ஜீவிகளும்

மக்கள் போராட்டம் (ஆண்களும் பெண்களும், வாலிபரும், வயோதிபரும், விவசாய கூலிகளும், உழைப்பாளிகளும், அலுவலக அதிகாரிகளும் வர்த்தகர்களும், கிராமப்புறத்தவரும் தேசபிமானிகளும் பொதுவுடமைவாதிகளும்) எல்லா வடிவ போராட்டங்களையும் (ஆயுதமேந்திய அரசியல், இராணுவ, கைத்தொழில், பண்பாட்டு, சிறப்புப் பயிற்சி பெற்றவர்களாலும், மக்கள் கூட்டத்தாலும் வன்முறையும், சாத்விகமும்) கட்டாயம் உள்ளடக்க வேண்டும். நாடு தழுவிய போராட்டம் என்பதே இதன் கருத்து.

றெஜிஸ் டெப்ரே.

**எமது நிலையும் நிலைப்பாடும்.**

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அமைக்கப்பட்ட வட்ட மேசை மகாநாடு வெறும் வாய்வீச்சும் வெற்று தீர்வும் பேசி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், அரசியல் வாழ்வில் அஸ்தமனமான தலைவர்களும் சிங்கள பூர்சுவாத தலைமையுடன் அரசியல் பேரத்தில் ஈடுபடும் வேளையில், சர்வதேச பயங்கரவாதியான இஸ்ரவேலும் கூட்டு சேர்த்து அமெரிக்க ஆயுதங்களை அள்ளி குவித்து அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்தி இராணுவ தளங்களை விஸ்தரித்து நெருக்கடி நிலைமையில் ஈழமக்கள் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க சதித் திட்டம் தீட்டப்படுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையாட்களாக மூன்றாம்உலக நாடுகளில் விடுதலை போர்களை ஒடுக்கி இஸ்ரேல் இராணுவ நிபுணத்துவத்தின் உதவியோடு ஈழமக்கள் போராட்டத்தை அடக்கி மக்களை அழிக்கும் வேலை ஈழ மண்ணில் ஆரம்பிக்கப் பட்டுவிட்டது. கிழக்கு திமோரிய மக்களின் விடுதலை போராட்டத்தை அடக்கி ஒடுக்க முஸ்லிம் நாடான இந்தோனேசியா இஸ்ரவேல் உதவியைப் பெற்றதும் குறிப்பிடத் தக்கது.

**சி. ஐ. ஏ அறிக்கையின்படி**

சில காலத்திற்கு தென் ஆசியாவில் இஸ்ரவேல் செயற்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சீனக் குடியரசு (தைவான்) அரசிற்கு உளவு சேவையிற் பயிற்சி அளித்ததோடு இணைப்பை பேணியுள்ளார்கள். யப்பான் தாய்லாந்து, இந்தோனேசியா, கொரியா படைகளுடன் இஸ்ரேலிற்கும் உறவு உண்டு. குறிப்பாக பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து,,,இந்தோனேசிய சேவைக்கு சிங்கப்பூரிலுள்ள மொசாட் பிரதிநிதியே ஒப்புதல் பெற்றவர். ஜகர்த்தாவில் வர்த்தகப் போர்வையில் மொசாட் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இந்தோனேசிய இணைப்பின் முக்கிய காரணம் பயங்கரவாத எதிர்ப்பில் ஈடுபடுவதோடு மறுபக்கத்தில் இன்னுமொரு முஸ்லிம் சக்தியினரின் தகவல்களை சேகரித்து அரசியல் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பமும் கூட''.

இந்த மொசாட் பிரிவுதான் இலங்கையில் அமெரிக்க தூதுவராலயத்தில் கடைவித்து எதிர்கிளர்ச்சி நடவடிக்கைகளில் பயிற்சி கொடுக்கின்றது. நெருக்கடி நிலமையில் இராணுவ தீர்வால் ஈழ மக்கள் போராட்டம் ஒடுக்கப்பட முன் விடுதலைப் போராட்டம் நன்கு திட்டமிடப்பட்டு, பன்முகப்படுத்தப்பட்டு, சர்வதேச புரட்சி சக்திகளின் தோழமையோடு வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

**புத்திஜீவிகள் என்ற புதிய வர்க்கம்.**

ஆசியாவில் காலனித்துவ ஆட்சியைத் தொடர்ந்து உருவான பொருளாதார உற்பத்தி மாற்றம் சமூக உறவில் மாற்றங்களை உருவாக்கியதோடு புதிய வர்க்கங்களையும் பிறப்பித்தது. காலனித்துவ வாதிகளிடமிருந்து இத் தேசிய பூர்சுவாக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்டனர். கிராமப்புற நில உடமையாளரும், பண்பாட்டு குழு தலைவர்களும், நகர் புறங்களில் மட்டுமல்லாமல் கிராமப் புறங்களிலும் உள்ளூர் பூர்சுவாக்களாக பரிணமிக்கத் தொடங்கினர்.

ஆங்கில காலனித்துவ ஆட்சியில் நிர்வாக அதிகார இன பூர்சுவா புதிதாகத் தோன்றிய இடை வர்க்கமாகும். ஆசிய ஆபிரிக்க நாடுகளில் இவ் வர்க்கம் தனித்துவமான நிலைப்பாட்டை கொண்டுள்ளதோடு காலனித்துவ விடுதலையின் பின் தனிச் சலுகை பெறும் வர்க்கமாகும். மற்றைய பூர்சுவாக்களையும் பூர்சுவாக்கள் சக்திகளையும் பிரதிநிதித்துவப்படுத்தவும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. ஆபிரிக்காவில் பூர்சுவாக்கள் என்பதன் கருத்து நிர்வாக அதிகாரிதான் என்று பிரஞ்சுப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டது. இவ்வர்க்கம் காலனித்துவ ஆட்சியில் நிர்வாக சேவை பயபக்தியோடு சேவையாற்றியதோடு அரசில் கைமாற்றத்தின்போது தமது வர்க்கத்தவனை பேணி நிலையை ஸ்திரப்படுத்தி தேசிய அரசியல் உலகில் சிறந்த தேசியவாதிகளாக தம்மைக் காட்டிக் கொண்டது. நாட்டு மக்களின் வாழ்க்கையை விட வித்தியாசமானதாகவும் உயர் சம்பளத்தோடும், பல சலுகைகளோடும் அரசின் திட்டங்களை கட்டுப்படுத்தியும் தமது நிலையினை தொடர்ந்து பேணியது.

இவ்வர்க்கம் அரசியல் பதவி போட்டியில் தேசிய எதிர்ப்பு நடவடிக்கையிலும், ஜனநாயக விரோத செயல்களிலும் ஈடுபடவும் தவறுவதில்லை.

இவ் வர்க்கத்தோடு இணையக் கூடியதும் ஆனால் நிலைப்பாட்டால் இணையாததுமான புத்திஜீவிகள் என்ற இடைவர்க்கம் ஆங்கிலக் கல்வியோடு தோன்றி காலனித்துவ அரசியல் போராட்டத்தில் முன்னணி வகித்து தேசிய அரசியலில் செல்வாக்கு மிக்க வர்க்கமாக திகழ்கின்றவர்கள். இவர்கள் சமுகவியலில் புதிய வர்க்கமாகும். ஆங்கிலக் கல்வி விரிவாக்கப் பட்டதாலும் சமுக எழுச்சியாலும், இவ் வர்க்கம் இலங்கையில் பெருகியது. புத்திஜீவிகள் அரசியல் தெரிவிலும் சமுக கட்டுப்பாட்டிலும் சுறுசுறுப்பு மிக்கவர்களாகவும், சுதந்திரமான போக்குடையவர்களாகவும் விளங்கியபோதிலும் சித்தாந்த ரீதியில் அவர் முனைவாக்கப்பட்டு வித்தியாசமாக செயல்படுவதையும் காணலாம். சமுக இலக்கிய வாழ்விலும், அரசியல் தெரிவிலும் தேசிய பூர்சுவாக்களுடன் இணைந்து பண்டைய வரலாற்று ரீதியாக தேசிய எழுச்சியை உருவாக்குபவராகவும், கம்யூனிசத்தை எதிர்ப்பவர்களாகவும் பரிணமிக்க, மற்றைய பகுதியினர் முற்போக்கு சிந்தனையுடையோராகவும், இடதுசாரி நிலைப்பாட்டோடு புரட்சிவாதிகளாக மாறுவதையும் காணலாம். சர்வதேச சந்தையில் ஏற்பட்ட தேவையால் இவ்வர்க்கம் தமது தாய் நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து தேசிய பண்புகளை இழக்கவும் கூடியது ஆனாலும் இவ் வர்க்கம் தேசிய விடுதலை போரில் தவிர்க்க முடியாத வர்க்கமாகும்.

## தமிழ் புத்தி ஜீவிகளின் வரலாற்றுப் பரிணாமம்.

நிர்வாக பூர்சுவாக்களும், புத்திஜீவிகளும் இணைந்த தலைமைப் பண்புடையதாக ஈழத் தமிழர்கள் தலைமை 1980 வரை நேரடியாக அமைந்திருந்ததை காணலாம். பாராளுமன்ற அரசியல் தலைமை 1984ல் பிரிவினை எதிர்ப்பு மசோதாவரை புத்திஜீவிகளில் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது. 1920ல் இருந்து ஆங்கில கல்வியினால் முன்னுக்கு வந்த புத்திஜீவிகள் வர்க்கம் காலனித்துவ அரசியலில் முன்னுக்கு வந்தது. பொன்னம்பலம் சகோதரர்கள் யாழ்ப்பாண நில உடமை வர்க்கத்திலிருந்து ஆங்கிலக்கல்வி மூலம் நிர்வாக சேவையூடாக அரசியலில் புகுந்தார்கள். பொன்னம்பலம் இராமநாதன், கல்வி கற்ற இலங்கையர் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தியது, புத்திஜீவிகள் அரசியல் வருகைக்கு கட்டியம் கூறியது. அரசியலில் மக்களின் நேரடிப் பங்களிப்பை கொடுக்கூடிய வெகுஜன வாக்குரிமையை இப் புத்தி ஜீவிகள் மிக உக்கிரமமாக எதிர்த்துள்ளனர்.

ஆங்கிலக் கல்வி கற்று தமிழ் சிங்கள புத்திஜீவிகளும் காலனித்துவ அரசியலில் இணைந்து அரசியல் சீர்திருத்தத்திற்கு இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஊடாக உழைத்த பொழுதிலும் சிங்கள பௌத்த தேசிய வாதம் தென்னிலங்கையில் அநாகரிக தர்மபாலா போன்ற பௌத்த தலைவர்கள் பௌத்த பிக்குகளால் முன்வைக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தப்பட்டது. இனவாரி பிரதிநிதித்துவத்தை டொனமூர் சீர்திருத்தம் இல்லாதொழித்து வாக்குரிமையூடாக பிரதிநிதித்துவம் அளிக்க முன்வந்ததும் புத்திஜீவிகள் அரசியல் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதால் இவ் வர்க்கம் வன்மையாக எதிர்த்தது. மேல்மாகாண தொகுதி பிரதித்துவப்படுதத பொன்னம்

பலம் அருணுசலம் தெரிவுசெய்யப்படத் தவறியது, இலங்கை தேசிய காங்கிரசில் புத்திஜீவிகள் வர்க்கம் தமிழ், சிங்களம் என முறையாக்கப்பெற்றது. 1930 தமிழ் அமைக்கப்பட்ட தனி சிங்கள மந்திரியை தமிழ் புத்தி ஜீவிகள் தேசிய அரசியல் முற்ருக ஒதுக்கிவிட்டது. காலனித்துவ அரசியல் கைமாற்றத்தை சமமாக பங்கிட தமிழ் புத்தி ஜீவிகள் விரும்பியது திரு ஜி ஜீ. பொன்னம்பலம் 50ற்கு 50 என்ற சமபல பிரதிநிதித்துவக் கோரிக்கையில் வெளிப்பட்டது.

1948 இன் அரசியல் கைமாற்றம் முற்று முழுதாக சிங்கள தேசிய பூர்சுவாக்கள் கைக்கு சென்றது. 1956 வரை இலங்கை தேசிய தமிழ் அரசியல் வாதிகள் ஒத்துழைப்பை கொடுத்தது. 1956ன் பின் ஆங்கில கல்வி கற்ற புத்தி ஜீவி வர்க்கம் பின் தள்ளப்பட்டது. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையில் சிங்கள பௌத்த எழுச்சியை அரசியலில் பயன்படுத்திய பொழுது சிங்களக் கல்வி கற்ற புத்திஜீவிகள் தேசிய அரசியலில் முன்னுக்கு வந்தார்கள். இந்த சிங்கள பௌத்த எழுச்சி சிங்களம்-மட்டும் ஆட்சி மொழியை சட்டமாக்கியது. இந்த எழுச்சியால் தமிழ் பூர்சுவாக்கள் நிலை ஸ்திர மற்றதாக்கியது. இவ் எழுச்சிகளின் தாக்குதல் தேசிய தமிழ் எழுச்சியாக தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியது. இது தமிழரசு கட்சி என்ற அரசியல் கட்சியாக பரிணமித்தது. கொழும்பு பிரதேச புத்திஜீவிகள் ஒதுக்கப்பட்டு தமிழ் பிரதேச உள்ளூர் புத்திஜீவிகள் தலைமை தோன்றத் தொடங்கியது. தமிழ் புத்தி ஜீவிகளின் முனைவாக்கத்தில் வெளிப்பாடாக 1956ல் தொடங்கிய தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தையும் கொள்ளவேண்டும்.

நிர்வாக சேவையில் தமிழ் புத்தி ஜீவிகள் உட்புக முடியாததாலும், தமிழ் புத்தி ஜீவிகளை உருவாக்கும் பல்கலைக்கழக பிரவேசம் தரப்படுத்தலால் தடைப்பட்டதுடன் அரசியல் பிரச்சினை உக்கிரமமாகியது, 1977 வரை இப் பிரச்சினைகளையும் முக்கிய பிரச்சனைகளாக தமிழ் அரசியல் கட்சிகள் முன் வைத்தன.

இப்பிரச்சினைகளை விட தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கினர். மக்கள் மீது ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையாக உழைப்பாளர்கள் வருமானம் இறக்குமதிக் கொள்கையால் தடுக்கப்பட்டதோடு 1977 இனக்கலவரம் தமிழ் மக்கள் கட்டிநிறுத்தப்பட்டதாலும் தலைமை மாற்றத்தை இளைஞர் உருவாக்கினர்கள்.

1983 பிரிவினை எதிர்ப்பு மசோதாவை தொடர்ந்து பாராளுமன்ற தலைமை மறைந்தது. தமிழ் புத்திஜீவி தலைமை இந்தியாவிலும் பிறநாடுகளிலும் அஞ்ஞானவாசம் புரியத் தொடங்க உழைப்பு மக்களின் இராணுவ தலைமை எமது பிரதேசத்தில் வெளிப்படத் தொடங்கியது. இப் புத்திஜீவி தலைமை இல்லாமல் போக இங்கு தங்கியிருக்கும் உள்ளூர் புத்தி ஜீவிகள் பிரஜை குழுக்கள் என்ற இடைக்கால அரசியல் நடத்துவதையும் காணலாம். அமைச்சரோடு பேச்சுவார்த்தைகள், பத்திரிகை அறிக்கைகள் போன்று அரசியல் நடத்தும் இந்த புத்தி ஜீவி வர்க்கம் தமிழ் ஈழமக்கள் புரட்சிகர போராட்டத்தை விட்டுக் கொடுக்கவும், இடைக்கால தீர்வுகளை பெற்றுக் கொள்ளவும் தயங்க மாட்டாது.

வைதீக மார்க்சிய புத்திஜீகள் 1977 வரை சிங்கள மார்க்சிய புத்தி ஜீவிகளை ஒட்டி நின்று அவர்களது பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்கு ஆட்பட்டு அதனுல் அரசியல் அனுதை ஆக்கப்பட்டு விட்டார்கள். சிங்கள மார்க்சிய வாதிகள் அறுபதில் சிங்கள பௌத்த வாதத்துடன் சோரம் போனபின் அவர்களோடு கூடி நின்று அறிக்கை விட்டு அரசியல் பேசிய தமிழ் மார்க்சிய புத்திஜீவி பூர்சுவா தலைமையுடன் இணைந்து காணுமற் போய்விட்டார்கள். திரு. பொன்னம்பலம் செந்தமிழீழ இயக்கம் என்று தோற்றுவித்து தமிழர் விடுதலை கூட்டணியுடன் இணைத்து அரசியலில் இறந்து விட்டார்.

ஈழமக்கள் போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமாகும். தேசிய விடுதலைப் போராட்டங்கள் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை வரலாற்று ரீதியில் பேணுதல் என்ற அடிப்படையில் நிகழ்த்தப்படுவது. தேசிய வாதம் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தை விழிக்கவைக்கும் புரட்சிகரமாகும். (காலனித்துவ வாதிகளின் செயற்கைப் புவியியல் அமைப்பில் தேசியவாதம் என்ற பார்வையிலிருந்து விடுக்கும் மக்கள் போராட்டம் முற்போக்கானதே) தேசியவாதம் சர்வதேசிய வாதத்தின் முரண்பாடல்ல. சம உரிமையுள்ள தேசிய இன மக்கள் கூட்டத்தின் ஒற்றுமையுணர்வில் சர்வ தேசியவாதம் மலர வேண்டும்.

ஈழமக்கள் போராட்டம் பூர்சுவா போராட்டமல்ல மக்கள் போராட்டம். உலக பூர்வீக புரட்சிகர போராட்டத்தில் ஒரு பகுதி. எமது போராட்டம் எல்லா வர்க்கமும் இணைந்த மக்கள் போராட்டமாக மாற வேண்டும். எமது போராட்டம் இடது சாரி துணிவு செய்கை நடவடிக்கையாக மாற, மக்கள் இணைந்த தாக்குதலுக்குரிய போராட்டமாக மாற வேண்டும். மக்களை தளமாக கொள்ளாத கொரில்லா இராணுவ யுத்தம் வெற்றியளிக்க முடியாது.

# இனப் பிரச்சனையும் தெற்கில் நெருக்கடியும்

லங்கா காடியன் ஆகஸ்ட் 15, 1984 இதழில் தயான் ஜயத்திலகா எழுதிய இனப் பிரச்சினையும் தெற்கில் நெருக்கடியும் என்ற கட்டுரைத் தொடரில் இருந்து தொகுக்கப்பட்ட சில பகுதிகளை இங்கே தருகிறோம்

அரசியலிலிருந்து இப்போதுள்ள நெருக்கடி நிலையில் இராணுவத்தின் பக்கம் நோக்க விரும்புகின்றேன். இப்போதுள்ள நிலைமையில் ஆயுதப்படைகளிடம் குறைவான ஒழுக்கமும், கட்டுப்பாடற்ற நிலையும் காணப்படுகின்றன. இந்தியாவில் நடந்த பொற்கோயில் சம்பவம் இக்கட்டத்தில் மிகவும் புத்தி புகட்டும் ஒரு சம்பவமாகும். இங்கு இந்தியப்படைகளை வழி நடத்திய மூன்று தளபதிகளில் ஒருவர் சீக்கியராவர். அத்துடன் படையில் பலரும் சீக்கிய வீரர்களாவர். வேறுவிதமாகக் கூறின் இச் சம்பவத்தில் ஒரு முதலாளித்துவ நாட்டின் நியாயாதிக்கம் எவ்வகையில் அமைந்த தென்றால் அது இனத்தின் மீதுள்ள உண்மைப்பற்றையும், மீறிச் சென்றுள்ளது. அங்குமிங்குமாக நடந்த அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாத சில சில சம்பவங்களைத் தவிர, ஓர் இராணுவ ரீதியான அணுகு முறையில் திட்டங்களை வகுக்கும் போது தொழிலில் மதிப்பும், கட்டுப்பாடுகளும் மிகமிக அவசியமானவையாகும். போர் முறையான திட்டமிடலில் ஒரு செயற்கருவியே. சரியாக அமையாவிடின் அங்கேதான் உண்மையான பிரச்சனை தோன்றுகின்றது. இப்போது நாங்கள் எதிர்பார்ப்பது என்ன வென்றால் வருகின்ற மாதங்களில் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ்கொரில்லாக்களின் நடவடிக்கைகள் திடீரென்று விஸ்தரிக்கப்படுமானால் ஆயுதப்படைகள் பீதியடைய வேண்டிய நிலை ஏற்படுமா? ஆனால் அது எந்த விதத்திலும் அவர்களின் நடவடிக்கைகளை தடைசெய்ய உதவாது. நான் அறிந்தவரையில் ஆயுதப்படையினரிடம் இதை உறுதிப்படுத்தும்படியான எவ்வித தன்னடக்கமோ, அல்லது முன்மாதிரியான கட்டுப்பாடோ கிடையாது.

அடுத்து இராணுவத்திடம் வித்தியாசமான நோக்கங்களையுடைய பிரிவுகள் காணப்படுகின்றன. அவை கீழ், நடு, உயர் பிரிவுகளாகும். அங்கே 1971ம் ஆண்டு படையிலிருந்த நன்கு படித்த பயிற்சி பெற்ற அதிகாரிகள் இருந்தார்கள். இவர்கள் வெளிநாடுகளிலிருந்து கூட பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அங்கே தகுதியுடைய மேஜர்கள், கேணல்கள், இருக்கிறார்கள். ஆனால் கீழ்ப்பிரிவில் பாராளுமன்ற அங்கத்தவர்களின் சிட் மூலம் (UNP–SLFP இரண்டும்) கடந்த 10 வருடங்களில் உத்தியோகம் பெற்றவர்களும் இருக்கிறார்கள் இங்கே கடைசியாகக் கூறப்பட்ட கீழ்ப்பிரிவினர் ஒருவர் இராணுவத்தில் சேர்ந்தால் தன்னை நோக்கி ஒருநேரம் சுடப்படலாம் என்ற அறிவுகூட இல்லாதவர்கள். ஆனால் இந் நிலையில் முதலாளித்துவ அரசின் தேசிய பாதுகாப்பைப்பற்றி கவலைப்படுபவர்களுக்கு இது சந்தோஷம் தரக்கூடியஒன்றல்ல

ஒபரோயிலிருந்து — அம்பாறைவரை சண்டை விரிவடைந்துள்ளது. இது இப்போது தெற்கிற்கும் பரவியுள்ளது. இது உல்லாசப் பிரயாணத்துறையை மிகவும் பாதித்துள்ளது. அம்பாறை பொலிஸ் நிலைய தாக்குதல் எதை உணர்த்துகின்றதென்றால் யுத்த பலம் புவியியல் ரீதியாக விரிவு படுத்தப்பட்டுள்ள தென்பதை. அம்பாறை ஒரு சிங்களப் பிரதேசமாக சிங்கள மக்களால் கருதப்படுகிறது. இது 1948ம் ஆண்டு D. S. சேனநாயக்காவின் குடியேற்றத்திட்டம் காரணமாக உருவானது. ''SUN'' பத்திரிகைபடி தாக்கியவர்கள் படியத்தலாவா ஊடாகத் தப்பியுள்ளார்கள். அப்படியானால் இச்சம்பவம் தமிழ் கொரில்லாக்களின் எல்லை இப்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதையே காட்டுகிறது. படையினர் இது ஒரு குடாநாட்டுச் சண்டை என நினைக்கிறார்கள். ஆனால் இது நிச்சயமாக வெளியேயும் பரவியுள்ளது. நான் எண்ணுகிறேன் தற்போது உள்ள நெருக்கடி நிலையில் இராணுவத்தின் உண்மையான பிரச்சனை கொரில்லாக்களைக்

கைது செய்ய முடியாமையாகும். கென்றி கீசிங்கர் கூறியதுபோல ஒரு கொரில்லா யுத்தத்தில் கொரில்லாக்களைச் சிறைபபடுத்த முடியவில்லை யென்றால் அது உண்மையில் கொரில்லாக்களுக்கு ஒரு வெற்றியாகும். இராணுவம் இதில் வெற்றி காணவில்லையென்றால் அதன் பொருள் அவர்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதாகும். மறுபக்கம் கொரில்லாக்கள் தோற்கவில்லை யென்றால் அதன் பொருள் அவர்கள் வென்றுகொண்டிருக்கிறார்கள். ஆகவே காலம் கொரில்லாக்கள் பக்கமே உள்ளது. இன்னொரு பக்கமாக இப்போரில் இயற்கையாக எதிரியின் பொருளாதார வளங்களைக் குன்றச் செய்தல் கொரில்லாப்போரின் யுக்தியாகும் ஆகவே தமிழ் கொரில்லாக்கள் தோற்கவில்லை—வென்று கொண்டிருக்கிறார்கள்.

இதுதான் கொரில்லாப்போரின் இயற்கையாகும். ஏனென்றால் அவர்களுக்கு இயற்கையாகவே சில அனுகூலங்கள் உண்டு. வழமையாக அவர்களுக்கு மக்களுடைய ஆதரவும், அனுதாபமும், இருக்கும். ஆனால் ஆயுதப் படையினருக்கு இவ்வகையான சமூக ஆதரவுகள்கிடைப்பதில்லை.

அடுத்து நாங்கள் வெளிநாட்டுக் கொள்கையிலுள்ள பிரச்சனைகளைப்பற்றிப் பார்த்தால்— ஒன்றை மட்டும் குறிப்பிடுவேன். இலங்கை ராஜதந்திர முறையில் தனித்த நாடாக ஆக்கப்பட்டுள்ளது. ஆயுதப்படைகளின் கண்மூடித்தனமான போக்காலும், (இஸ்ரவேலின் இலங்கைப் பிரவேசம் போல) இலங்கை ராஜதந்திர மட்டத்தில் பெருந் தாக்குதலுக்குள்ளாகியு ள் ள து. எதிர் தரப்பினரின் கருத்துப்படி நாங்கள் குறைந்தது மூன்று அரபு நாடுகளுடன் பிரச்சனைக்குள்ளாகி இருக்கின்றோம். ஈராக் தூதுவர் நாட்டைவிட்டுப் போய் விட்டதாகக் கருதப்படுகிறது. சவூதி தூதுவர் இன்னும் வரவில்லை. ஆகவே அரபு நாடுகளுடன் எமது தொடர்பு நிச்சயமாக விருத்தியடையும் வாய்ப்பில்லை. லிபியா போன்ற நாடுகளின் பகைமையை சம்பாதித்ததும் இலங்கைக்கு புத்திசாலித்தனமான செய்கையல்ல.

அடுத்து சமூகப் பிரச்சனைகளைப்பற்றி ஆராய்வோமானால் இங்கே சங்கிலித் தொடரான இனப்பிரச்சனைகள் காணப்படுகின்றன. தமிழ் இன அமைப்பு சிங்கள இன அமைப்பு அத்துடன் வளர்ந்து வரும் முஸ்லிம் இன அமைப்பு, அத்துடன் தோட்டத் தொழிலாளர் பிரச்சனை. இவ்வின அமைப்புகளோடு பின்னிப் பிணைந்த பிரச்சனைகளாகப் பொருளாதார, அரசியல் பிரச்சனைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சனைகளாக உள்ளன. அரசியல் பிரச்சனை என்னும்போது ஸ்திரமில்லாமையும் அதனாலேற்படும் பொருளாதார தாரப் பிரச்சனைகளும், — பொருளாதாரப்பிரச்சனை என்னும் போது ஒவ்வொரு துறைகள் மீதும் உள்ள சுமைகளையும், அதனாலேற்படும் சமுதாய அதிருப்தியும் ஆகும். ஆகவே சமுதாயப் பிரச்சனைகளின் அதிகரிப்பு அரசியல் பிரச்சனைகளை அதிகரிக்கும்.

இப்பொழுது வெளிநாட்டுக் கொள்கைக்கும் இராணுவப் பிரச்சனைக்குமுள்ள தொடர்பைப் பார்ப்போம். பல பேச்சுக்களிலும் பேசப்படுகிறது— 1971ல் 5000 சிங்களவர்களைக் கொன்றிருக்க முடியுமானால் ஏன் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு அதே செயலை UNP செய்ய முடியாதென்று. ஆனால் அப்படி செய்ய முடியாமைக்கு ஒரு காரணம் தமிழர் விவகாரம் ஒரு சர்வதேசப் பிரச்சனையாக இருப்பதனாலாகும். ஒருபக்கம் இயற்கையாக மனித உரிமை மீறலுக்கு எதிரான பிரச்சனை. மறுபுறம் இந்தியாவின் உள்நாட்டு அரசியலுடன் கலந்த பிரசனை, வன்முறையில் இராணுவத்தினர் இறங்குவார்களேயானால் தமிழ் நாட்டு மக்களின் மனக்குமுறல்கள் டெல்லி அரசாங்கத்தை தீவிர நடவடிக்கை எடுக்கும்படி கட்டாயப்படுத்துவதாக முடியும். இதுவே வெளிநாட்டுக் கொள்கைக்கும், இராணுவப் பிரச்சனைக்கும் உள்ள தொடர்பாகும்.

இனி இராணுவப் பிரச்சனைக்கும், பொருளாதாரப் பிரச்சனைக்குமுள்ள விளைவுகளைப் பார்த்தால் இராணுவ அமைப்பும் அதன் பராமரிப்பும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவை நிலை கொ ண் டு ள் ள மை யு ம், பொருளாதார வளங்களில் பெரிய வீழ்ச்சியாகும். ஆகவே அரசு மக்களுடைய வயிற்றில் அடிப்பதாக அமையும். ஆகவே அங்கு மீண்டும் சமூக அதிருப்தி. ஆகவே எல்லாப்பிரச்சனைகளும் ஒன்றையொன்று வலுவூட்டும் ஒரே பிரச்சனைதான். உற்றுப் பார்த்தால் நாட்டின் வளங்களையும் உபகரணங்களையும் மீளவும் ஒன்று சேர்த்து மீளமைக்கப்படுதல் என்ற தலைப்பில் நான் எதைக் கருதுகின்றேனென்றால் லத்தீன் அமெரிக்க சமூக விஞ்ஞானிகள் கூறியது போல தேசிய ரீதியில் பாதுகாப்பான ஒரு நாட்டையாகும். ஓர் நாட்டின் உடைமைகளை ஒரு நிலையான யுத்த அமைப்பிலும், இராணுவ அமைப்பிலும் ஈடுபடுத்தலாகும். இதையே— இந்தமுடிவையே இன்று சர்வதிகாரமான தேசிய பாதுகாப்பு சபை, இராணுவத்தின் துணையோடு அமுல்படுத்தி வருகிறது.

# தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும உண்மைகளும

மலையகத் தமிழரில் 93.05 வீதத்தினர் (ஆண்களில் 87.8 பெண்களில் 98.3 ) தொழிலாளராவர். இலங்கையின் மொத்த உழைப்பாளர் படையில் பகுதியையும், தொழிலாளர் படையில் விகிதத்தையும் இவர்கள் கொண்டுள்ளார்கள். இதைவிட முழு பெண் உழைப்பாளரில் 36.5 வீதத்தையும் தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் பெண் உழைப்பாளர்களில் 75 வீதத்தையும் மலையகத் தமிழ்ப்பெண் தொழிலாளர்களே வகிக்கின்றனர்கள். இலங்கையின் ஏற்றுமதி வருவாயில் 50 வீதம் (1968இல் இது 75.55 வீதமாக இருந்தது) தேயிலை இறப்பர் ஆகிய இருபயிர்களும் பெற்றுத் தருகின்றன. இவ்விரு பெருந்தோட்டங்களும் மலையக தமிழ்த் தொழிலாளரின் உழைப்பிலேயே தங்கியுள்ளன. இதைத் தவிர ஒரே தொழிலில் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணியை உடைய ஒரேவகை மக்களை இவ்வளவு பிரமாண்டமான எண்ணிக்கையில் கொண்டுள்ள வேறெந்தத் துறையும் இலங்கையில் கிடையாது.

தோட்டத் தொழிலாளர் வேறெந்தத் தொழிலாளரையும் விட தொழிற்சங்கங்களில் ஸ்தாபனப்பட்டுள்ளனர். ஒரேநாளில் 6 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஸ்தாபனப்பட்ட ஒரு வேலை நிறுத்தத்தையோ, வேறெந்தப் போராட்டத்தையோ நடத்த முடியுமானல் அது தோட்டத் தொழிலாளர் மாத்திரமே! இதிலிருந்து தெரிவதென்ன? தோட்டத் தொழிலாளரின் உணர்வு பூர்வமான ஆதரவு கிடைக்கும் வரைக்கும் மொத்த தொழிலாள வர்க்க இயக்கமும் சரி முழு மக்களது இயக்கமும் சரி பிரமாண்டமான எந்த ஒரு வெற்றியையும் பெற முடியாது.

— மாவலியான் —

இதனைத் தொழிலாள இயக்கத்தின் ''தலைவர்கள்'' புரிந்து கொண்டிருக்கிருர்களோ இல்லையோ நிச்சயமாக ஆளும் வர்க்கம் புரிந்து கொண்டிருக்கின்றது. அதனுற்றான் மலையக தொழிலாளரை ஏனைய மக்களில் இருந்து தனிமைப்படுத்தவும் அதன் மூலமாக தொழிலாள வர்க்க இயக்கத்தைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்தவும் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகின்றது. இதன்மூலம் இரு நன்மைகளை ஆளும் வர்க்கம் பெற்று வருகிறது. ஒன்று மலையக தமிழ் தோட்டத் தொழிலாளரைத் தனிமைப்படுத்தி தேசிய இன ஒடுக்குமுறையுடன் கூடிய மூர்க்கமான சுரண்டலின்மூலம் பெருவாரி இலாபம் ஈட்டி வருகின்றது. இரண்டு மறுபுறத்தில் பல்செடலுக்குத் தூபமிட்டு சகல வேறு பொய்மைகளைப் பரப்பி பல்வேறு தேசிய இனங்களிடையே பிளவைத் திட்டமிட்டே விசாலமாக்கிப் பிரித்தாளும் ராஜதந்திரத்தால் தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்கிறது.

சிங்களப் பாட்டாளி வர்க்கம் வரலாற்றில் பல மகத்தான சாதனைகள் புரிந்துள்ளது. பல்வேறு போராட்டங்களை அநீதிக்கும் சுரண்டலுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகத் தலைமை தாங்கிச் சென்றுள்ளது. வீரத் தியாகங்கள் புரிந்துள்ளது. ஆனல் இன்று ஆளும் வர்க்கத்தின் பொய்மைகளை நம்பி, சித்தாந்த அடிமைத்தனத்திற்குள்ளாகி பல சமயங்களில் பிற தேசிய இனங்களைச் சேர்ந்த தமது வர்க்க சகோதரர்களைப் படுகொலை செய்யும் அளவுக்கு பாரதூரமான அநீதிகள் இழைத்து வருகின்றது. வேண்டுமானல் 77,81, 83 ஜுலை ஆண்டுகளில் நடைபெற்ற அநாகரீகமான செயல்களை நினைவு கூருவோம். தம்மோடு எவ்விதத்திலும் தகராறுக்கு வந்திராத மலையக தமிழ் தொழிலாளரே இவ் வன்செயல்களில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

சிங்கள மக்கள் ஏன் அவ்வாறு காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்டனர்? ஏனெனில் ஆளும் வர்க்கம் தனது சொந்த நன்மைக்காகத் திட்டமிட்டு பொய்மைகளைப் பரப்பி தப்பெண்ணங்களை ஊட்டி வளர்த்து வருகின்றது. இதன் மூலம் தேசிய வெறியைத் தூண்டி வன்

பாவங்களையும் இனத்தின் பெயரால், மொழியின் பெயரால் தேச பக்தியின் பெயரால் செய்யும்படி அறைகூவல் விடுகின்றது. இவ்வாறு ஏனைய சூடேறிய பிரதான பிரச்சனைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி முழு மக்களையும் விசேடமாக சிங்கள மக்களை அடிமைப்படுத்துவதில் ஆளும் வர்க்கம் வெற்றிபெற்று வருகின்றது. எனவே ஆளும்வர்க்கத்திற்குப் பிற தேசிய இனங்களின் கழுத்தை நெரிப்பதற்கு உதவி செய்து கொண்டிருக்கும் வரைக்கும் தேசிய தப்பெண்ணங்களில் இருந்து விடுதலை பெறும் வரைக்கும் சிங்கள மக்கள் தமது விடுதலையைப் பெற முடியாது. ஐரிஷ் பிரச்சனையில் இங்கிலாந்து தொழிலாளருக்கு மார்க்ஸ் இதைத்தான் இப்படிக் கூறினர்: ''பிறதேசிய இனங்களை ஒடுக்கும் எந்த ஒரு தேசிய இனமும் தனது விடுதலையைப் பெற முடியாது.''

எனவே சிங்கள மக்கள் தேசிய தப்பெண்ணங்களில் இருந்து விடுதலை பெறுவதற்கு உதவும் முகமாக முதற்படியாக மலையக தமிழ் தொழிலாளர்— எமது வர்க்க சகோதரர் பற்றிய சில திட்டமிட்ட பொய்மைகளைப் பற்றி ஆராய்ந்து உண்மையைப் புரிய வைப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

### பொய்மை 1

மலையக தமிழர் தற்போது வாழுகின்ற பிரதேசம் கண்டி, சிங்கள விவசாயிகளுக்குரியது. தென் இந்தியாவில் இருந்து இங்குவந்து கண்டிச் சிங்களவரின் காணியை அபகரித்துக் கொண்டு அவர்களைத் துரத்தி அடித்த கயவரே தோட்டத் தொழிலாளர். எனவே எமது முன்னோர்கள் பறிகொடுத்த காணியை மீட்டெடுப்பது எமது தேசிய கடமை. மலையக தமிழர் மீது வஞ்சம் தீர்ப்பது, பழிக்குப் பழி வாங்குவது எமது தேசிய தர்மம்.'' இத்தகைய உணர்ச்சியைத் தூண்டவல்ல மேடைப் பேச்சுக்கள் 1977-ம் ஆண்டு தேர்தலின்போது அடிக்கடி கேட்டன. பள்ளிப்பாடப் புத்தகங்கள் முதல் பல்வேறு வரலாற்று நூல்கள்வரை இதனை ஒட்டிய கருத்துக்களை வெளியிடுகின்றன. அரசாங்கக் கொள்கை வகுப்போர் கூட திட்டங்கள் தீட்டும்போது இத்தகைய கண்ணோட்டத்தையே வெளிப்படுத்துகின்றனர். உதாரணமாக நட்சா கிராம தோட்ட ஒன்றிணைப்பு நிலச்சீர்திருத்தம் போன்ற அரசாங்கம் மலையகத்தில் மேற்கொண்ட சகல திட்டங்களும் மலையகத் தமிழரை வெளியேற்றி விட்டு அவர்கள் தொழில்புரியும் அல்லது குடியிருக்கும் காணிகளைச் சிங்கள கிராமங்களுக்கு ''மீட்டுக் கொடுப்பதையே'' இலக்காகக் கொண்டிருந்தன.

### உண்மைகள் இனிப்பேசட்டும்

1. கோயிற்காணி சட்டம்,முடிக்குரிய காணிச் சட்டம், பயனற்ற காணிச் சட்டம் ஆகிய பிரித்தானியராற் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் கண்டி இராச்சியத்தில் விவசாயத்திற்குட்படுத்தப்பட்டிருந்த கணிசமான அளவு நிலங்களை பெருந்தோட்டப் பயிர்செய்கையின் கீழ் பலவந்தமாகக் கொண்டு வந்தன என்பதும் இதனால் கண்டிய விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர் என்பதும் மறுக்க முடியாத வரலாற்று உண்மைகள், ஆனால் இவை மிகைப்படுத்தப் படுகின்றன அத்துடன் பிரித்தானியருக்கும் எமது ஏகாதிபத்திய அடிவருடிகளுக்கும் 'தலைவர்கள்' மீதும் எழவேண்டிய நியாயமான வெறுப்பும் ஆத்திரமும் அப்பாவி தோட்டத் தொழிலாளர் மீது திசை திருப்பப்படுகின்றன.

மேற்கூறிய சட்டங்களை நிறைவேற்றியது முதல் சிங்கள மக்களை வெளியேற்றிவிட்டு அந்நிலங்களை தமது உடைமையாகக் கொண்டதுவரை சகல காரியத்தையும செய்தது யார்? மலையகத் தமிழரா? இல்லை இல்லை பிரித்தானியர். அவனுக்கு அப்போது பக்கபலமாக நின்றது வேறுயாருமல்ல எமது இன்றைய ''சிங்கள வீரர்களான'' கௌரவ சிறில் மத்தியூக்களின் தந்தையர்தாம் அவர்கள்தான் அக்காணிகளை வெள்ளையனுக்கு வால்பிடித்து ஏக்கருக்கு 25 சத வீதம் அளவைச் செலவைச் செலுத்தி, வாங்கியவர்கள். மலையக தொழிலாளரல்ல.

2. பிரித்தானியர் மிலேச்சத்தனமான இக்காரியத்தைச் செய்யும்போது இங்கிலாந்தில் விவசாயிகளை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தி பஞ்சத்தினாலும் சாவினாலும் அவர்களைப் புதிய அச்சில் வார்த்து தனது தொழிலாள படையை உருவாக்கிக் கொண்ட ஒரு செயல் முறையை இங்கு கடைப்பிடிக்கவில்லை. மாறாக தென் இந்தியாவிலிருந்து பெருந்தோட்டத்திற்குத் தேவையான தொழிலாளரை தருவித்தனர். சிங்கள விவசாயிகளை அருகிலிருந்த பெருந்தோட்டப்

பயிர்ச் செய்கைக்காக கிராமங்களில் குடியமர்த்தினர். இதனுற்றுன் இன்றளவும் பெருந்தோட்டங்களைச் சுற்றிலும் கிராமிய அமைப்பு முறை சிதையாமல் காணப்படுகின்றது.

3. சில இனவாத வரலாற்றாசிரியர்கள் கூறுவதைப்போல அன்றைய கண்டியநிலம் விவசாயிகளுக்குச் சொந்தமாக இருக்கவில்லை. மாறாக நிலம் அரசனுக்கும் அவனது பிரதானிகளான பெரும் நிலப்பிரபுக்களுக்கும், மதப் பீடத்திற்கும் சொந்தமாக இருந்தது. சிங்கள விவசாயிகளோ நிலப்பிரபுக்களின் பண்ணை அடிமைகளாக சொல்லொணுத் துயரில் உழன்றனர். தமது எசமானருக்கு வரி செலுத்த முடியாமல் அவதிப்பட்டனர்.

4. இன்று தேயிலையாலும் இறப்பராலும் மூடப்பட்டு பரந்து விரிந்து கிடக்கும் எல்லா நிலப் பரப்பும் அவர்கள் கூறுவதைப் போல அன்று விவசாயத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அன்று நிலவிய கிராமிய இயற்கைப் பொருளாதாரம். அது நெற்பயிர்ச் செய்கையை மையமாகக் கொண்டிருந்தது. கடல் மட்டத்தில் இருந்து 3000 அடிக்குமேற்பட்ட உயர் மலை நாட்டில் நெல் விளையாது என்பது 3ம் வகுப்பு மாணவனுக்குக் கூடத் தெரியும். எனவே 3000 அடிக்கு மேற்பட்ட உயர் மலை நாட்டில் நெல்லை அடிப்படையாகக் கொண்ட கிராமங்களோ மனித குடியேற்றங்களோ அமையவில்லை. அமைந்திருக்கவும் முடியாது. உண்மையில் கரடி, புலி வாழ்ந்த காட்டை அழித்து பெருந்தோட்டங்களை அமைத்து அதில் முதன் முதலாகக் குடியேறியவர்கள் தோட்டத் தொழிலாளர்களே. அது அவர்களால் உருவாக்கப்பட்ட பிரதேசம். தேசிய தப்பெண்ணங்களுக்கப்பால் இருந்து நேர்மையாகவும் நேரடியாகவும் கூறுவதாயின், அது அவர்களுக்குச் சொந்தமான பூமி! பெருந்தோட்ட அபிவிருத்தியால் உருவான ஏனைய தொழில் வாய்ப்புகளுக்காக (உ—ம் ரயில்வே, வர்த்தகம்) அங்கு அதன் பின்பு சென்று குடியேறிய ஏனையோரே அம் மண்ணுக்கு அந்நியர்கள். இதனுற்றுன் மத்திய உயர் மலைநாட்டில் 200 வருடங்களுக்கு முற்பட்ட ஒரு கட்டடத்தைத்தானும் இன்று காண முடியவில்லை.

5. 3000 அடிக்குக் கீழ்ப்பட்ட கண்டிய பிரதேசங்கூட முழுமையாக சிங்கள மக்களின் குடியேற்றத்தை கொண்டிருக்கவில்லை. ஆற்றுப்பள்ளத்தாக்குகளும் புராதன நீர்ப்பாசனத்திற்குகந்த மலைச்சாரல்களுமே நெற்பயிர்ச் செய்கைக்கு ஏற்றனவாய் இருந்தன. இந்நிலங்களில் மாத்திரமே ஐதாக ஆங்காங்கே ஒன்றுடொன்று நெருக்கமாக இணையாக கிராமங்கள் காட்சியளித்தன. இதனை அன்றைய சனத்தொகையில் இருந்து தொகையில் இருந்து தெளிவாக உணரலாம். கோப்பிப் பயிர்ச்செய்கை ஆரம்பமான 50 ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது 1871—ல் இலங்கையின் மொத்த சனத்தொகை 24 இலட்சம் மாத்திரமே. இது ஏனைய இனத்தவரையும் (அப்போதைய 1½ இலட்சம் தோட்டத் தொழிலாளரையும்) உள்ளடக்கியதாகும். எனவே இன்று இருப்பதைப் போன்ற எங்கும் பரவிய அடர்த்தியான குடியேற்றத்தை அன்றைய சமுதாயத்தில் தேடுவது குழந்தைத்தனமான கற்பனையே தவிரவேறில்லை.

6. கண்டிய நிலத்தை (சிங்கள மக்களிடம் இருந்த பறிமுதல் செய்தவை உட்பட) லிப்டன், புறுக்பொன்ட் போன்ற பிரித்தானிய ராட்சத கம்பனிகள் மாத்திரம் வாங்கவில்லை இலங்கையின் பிற்கால தலைவர்களின் பெற்றோர்களும் வாங்கினர். 1948—ல் ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினரில் 80 வீதத்தினர் தோட்டச் சொந்தக்காராய் இருந்தனர். அமைச்சர் சிறில் மத்தியூசின் தந்தையாருக்கும் ஏராளமான தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. ஆகவே கண்டிய சிங்களவரின் நிலத்தைக் கவர்ந்த கள்வர்கள் இவர்களேயன்றி தோட்டத் தொழிலாளரல்ல.

7. மற்றொரு உண்மை மறைக்கப்படுகின்றது. ''தோட்டத் தொழிலாளர் இலங்கைக்குத் தாமாக வரவில்லை. வஞ்சகமாக வரவழைக்கப்பட்டனர்''. இதோ சில சான்றுகள்.

அ) தோட்ட உரிமையாளரின் ஏஜெண்டுகளான பெரிய கங்காணிமார்கள் எவ்வளவு தான் ஆசை வார்த்தைகள் கூறியபோதும் தென்னிந்தியாவில் தமது கிராமத்தை விட்டு இன்றைய தோட்டத் தொழிலாளரின் மூதாதையர் எளிதில் வெளியேறவில்லை. பிரித்தானியருக்கு எதிர்பார்த்த அளவு பெருந்தொகையான 'கூலிகள்' கிடைக்கவில்லை. இதனுல் தென்னிந்தியாவில் சில மாவட்டங்க

ளில் மாத்திரம் செயற்கையாகத் திட்டமிட்டு பஞ்சம் ஏற்படுத்தப்பட்டது; இவர்களை வெளியேற்றுவதற்காக.

ஆ) அவர்கள் தமது கிராமங்களிலில் இருந்து கால் நடையாக தமது துயர் தோய்ந்த பயணத்தைத் தொடங்கினர் இந்தியாவிலோ இலங்கையிலோ போக்குவரத்து வசதிகள் அப்போது இருக்கவில்லை. ரயில் பாதைகள் அமைக்கப்படவில்லை. கடல் பிரயாணத்திற்கு ஸ்டீமர் இருக்கவில்லை. தமது சிறு உடைமைகளை வழி வழியில் கொள்ளையரிடம் பறிகொடுத்து இறந்தவர் போக எஞ்சியவர் பல வாரங்கள் தொடர்ந்து நடத்தும் இடையில் உள்ள கடலை தோணியில் கடந்தும் மத்திய மலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர். அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி (1941—49) 8 வருடங்களுக்குள் இத்தகைய பிரயாணக் கஷ்டங்களாலும் மருத்துவ வசதி இன்மையாலும் தோட்டத் துரைமாரின் சூறைத்தனத் தாலும் 70,000 பேர் அல்லது 25 வீதம் ஈ, எறும்புகளைப் போல் செத்து மடிந்தனர். தோட்டங்களில் சாட்டை அடி, நாய்க்கடி, வசை இவைகளுக்கு மத்தியில் வேலை செய்தார்கள்.

இ) இத்தகைய மனிதாபிமானமற்ற நிலைமைக்கு எதிராக இந்தியாவில் மாத்திரமல்ல பிரித்தானியாவிலும் கூட எதிர்ப்புக் கிளம்பியதால் 1839இல் இந்திய அரசாங்கம் இந்திய தொழிலாளர் வெளியேறுவதை தடைசெய்தது. இலங்கை அரசாங்கம் அவர்களது நலனுக்கு உத்தரவாதமளிக்கும் பல சட்டங்களை இயற்றி தொடர்ந்து மன்றாடியதால் 8 வருடங்களுக்குப் பின்னர் (1847ல்) இத்தடை நீக்கப்பட்டது. எனவே இவர்கள் அடிமைகளாக இங்கு வஞ்சகமான முறையில் வருவிக்கப்பட்டரேதவிர எசமானராக விரும்பி வரவில்லை.

8. பிற்காலத்தில்கூட எமது 'தலைவர்கள்' தென் இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை வரவழைப்பதை ஒரு மனதாக ஆதரித்தனர். இவர்கள் தாம் பிற்காலத்தில் இந்திய எதிர்ப்பு வாதத்தினதும் தோட்டத் தொழிலாளர் பற்றிய பொய்மைகளை உருவாக்குவதிலும் தந்தையராகத்திகழ்ந்தனர்:

அ) 1930களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆத்திரத்தையும் கவனத்தையும் திசை திருப்புவதற்காக ''இந்திய எதிர்ப்பு', வாதம் உருவாக்கப்பட்டபோது என் எம். பெரேரா 1937 இல் அரசசபை(state council)யில் ''தோட்டத் தொழிலாளர் இந்தியாவில் இருந்து வரவழைப்பதற்காகன அனுமதிப் பத்திரங்களை இனிமேல் வழங்கக் கூடாது'' என்ற பிரேரணையை சமர்ப்பித்தார். இந்தப் பிரேரணை 29க்கு 5 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஒருவர் மாத்திரம் வாக்களிக்கவில்லை. அன்று அரசசபையில் இருந்த பெரும்பாலான அங்கத்தவர்கள் தோட்ட உரிமையாளர், அவர்கள் தமது ''மலிவான கூலிகளை'' இழக்க விரும்பவில்லை

ஆ) இலங்கை இந்தியப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இலங்கை வந்த நேருவின் முயற்சிகள் தோல்வியுற்றதால் ஆத்திரமுற்ற இந்திய அரசாங்கம் 1939ல் இந்திய தொழிலானர் இறக்குமதியை முற்றாகத் தடைசெய்தது. அத் தடையை நீக்குமாறு வேண்டுவதற்காக இலங்கையில் இருந்து மேல்மட்ட தூதுக் குழு ஒன்று இந்தியாவுக்குச் சென்றது. அத்தூதுக்குழுவில் மலையக தமிழரை ''நாடற்றவரா''க்குவதில் மூலகர்த்தாவாகத் திகழ்ந்த D. S. சேனநாயக்காவும் அங்கத்துவம் வகித்தார்.

இதிலிருந்து எமது சிங்களவீரர்கள் தாம் மலையக தோட்டத் தொழிலாளரை வரவழைப்பதில் முன்னணி வகித்தவர்கள் என்பது புலனாகவில்லையா?

பொய்மை: இரண்டு

''மலையக தமிழர் இந்தியாவில் இருந்து தொழில் வாய்ப்புக்காக இங்கு வந்தவர்கள். சிங்கள மக்களுக்கு கூலிகளாக குற்றவேல் புரியும் உரிமை மாத்திரம்தான் அவர்களுக்கு உண்டேதவிர இந்நாட்டில் எவ்வித தேசிய உரிமையும் அரசியல் உரிமையும் கிடையாது.

இந்த தேசிய ஆதிக்கவாத கருத்தை சற்று ஆராய்வோம்.

உலகில் பல்வேறு வகையான குடிபெயர்ச்சிகள் ( vigrations )

1. பலாத்காரமாகக் குடியேறிய வர்கள்.

ஒரு மக்கட் கூட்டம் மற்றொரு நாட்டை ஆக்கிரமித்து அந் நாட்டு குடிவாசிகளை ஆயுத பலத் தால் அடக்கி ஒடுக்கிவிட்டு அல் லது முற்றாக அழித்தொழித்து விட்டு அந்நாட்டை பலாத்கார மாக சொந்தமாக்கிக் கொண்ட நிகழ்ச்சிகள் உலக வரலாற்றில் தாராளமாக இடம் பெற்றுள் ளன.

அவுஸ்திரேலியாவின் ஆதிக் குடிகளான அபரோஜீன் மக்களை கொன்று குவித்து உயிரோடு எஞ்சியவர்களை ஒரு சிறு பிரதே சத்தில் சிறை வைத்திருக்கும் வெள்ளை நாகரீகத்துக்குப் பெயர் தான் அவுஸ்திரேலியா.

டாஸ்மேனிய நாட்டின் ஆதிக் குடிகளான டான்மேனியர்களை ஒருவர் தானும் உயிரோடு இல்லா மல் முற்று முழுதாக துவசம் செய்துவிட்டு அவர்களது பிணக் குவியல்மீது எழுப்பப்பட்டது டாஸ்மேனியா.

இன்கா, மாயா நாகரீகத்தை அழித்தொழித்து, செவ்விந்திய ரின் செங்குருதியால் எழுப்பப் பட்டதுதான் அமெரிக்க நாகரீ கம்.

இங்கெல்லாம் உண்மையான நாட்டின் சொந்தக்காரர்கள் ஒன்றில் அடிமைகளாக்கப்பட் டுள்ளனர். அல்லது முற்றாக அழித் தொழிக்கப்பட்டுள்ளனர், அத்து மீறிக் குடியேறியவர்கள் ஆக்கிர மிக்கப்பட்ட நாட்டின் சொந்தக் காரர் ஆகிவிட்டனர்.

2. பலாத்காரத்தைப் பிரயோகிக் காத குடியேற்றங்கள் நிகழ்ந் துள்ளன. அவற்றுள் தலைப் புடன் சம்பந்தப்பட்ட, காலனி தோற்றத்தோடொட்டிப் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை உரு வானபோது ''கூலிப்பட்டா ளங்கள்'' குடிபெயர்ந்ததை மாத்திரம் இங்கு ஆராய்வோம்

சீனு, இந்தியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளின் அன்றைய பின்தங்கிய நிலையை சாதகமாகக் கொண்டு காலணியல், அரசியல் காட்டுமிராண்டித் தனத்தால் தமது பெருந்தோட்டங்களுக்கு 'மலிவான கூலிகள்' பல்வேறு வழிகளில் காலனியல் வாதிகள் குடிபெயரச் செய்ததை வரலாறு அறியும்.

இலங்கை, பர்மா, தென் ஆபிரிக்கா, மேற்கிந்திய சீவுகள் பிஜத்தீவு போன்ற நாடுகளுக்கு சீனரும் ஆபிரிக்காவில் இருந்து மிலேச்சத்தனமான அடிமை வியாபாரத்தின் மூலம்அமெரிக்க, லத்தீன். அமெரிக்க நாடுகளுக்கு பிடித்துச் செல்லப்பட்ட நீக்ரோ மக்களும் இப்பிரிவில் அடங்குவர்.

இவ்வாறு குடியேறிய மலே சிய சீனர் அந்நாட்டின் பிரஜை கள் ஆகிவிட்டனர். அமெரிக்கக் கண்டத்தில் வாழும் நீக்ரோக் கள் அந்தந்த நாட்டின் குடிகளா கிவிட்டனர். ஆனுல் இலங்கை யில் மாத்திரம்தான் இன்னமும் ஒரு சாரார் நாடற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.

ஒட்டு மொத்தமாக ஆராயு மிடத்து இவ்வாறு பிறந்தகத்தை விட்டு மற்றொரு நாட்டுக்கு வஞ்ச கமாகவோ, பலாத்காரமாகவோ ''மலிவான உழைப்புப் பட்டாள மாக'' குடிபெயர்க்கப்பட்டோர் தாம் குடியேறிய நாடுகளை தமது கடின உழைப்பால் வாழ வைக் கின்றுர்கள். அவர்களால் அந்த நாடுகளுக்கு எதுவித தீங்கும் ஏற்பட்டதில்லை. ஆனுல் அவர் கள் தேசிய இன அடக்குமுறை யுடன் கூடிய படுமோசமான சுரண்டலுக்கு உள்ளாகின்றுர் கள். இரண்டாந்தர மூன்றுந்தர பிரஜைகளாக நடத்தப்படுகின் றுர்கள். இங்கெல்லாம் வர்க்கச் சுரண்டல் தேசிய இன அடக்கு முறையிலிருந்து பிரிக்க முடியாத படி இணைந்துள்ளதைக் காண லாம்.

ஆயுத பலத்தால் நாடுகளை அபகரித்தவர் ஆள்வோராகி விட் டனர். இன்று அமெரிக்கரைப் பார்த்து ''அமெரிக்கா செவ்விந் தியர்களுக்குச் சொந்தமானது நீங்கள் உங்கள் தாய் நாடான பிரித்தானியாவுக்கு திரும்பிச் செல்லுங்கள்'' என யாராவது கூறினுல் அது பைத்தியக்கார னின் பிதற்றலாகவே இருக்கும். ஒரு வரலாறு தெரிந்த ஜனநா யக வாதிகூட ''அமெரிக்கர் களே நீங்கள் பிரித்தானியாவில் இருந்து வந்து குடியேறினுலும் அமெரிக்காவே உங்கள் தாய் நாடு. வரலாற்று ரீதியான உங் கள் தேசிய உரிமையை நாம் மதிக் கின்றேம். ஆனு துப்பாக்கி முனையிலே நீங்களாகவே எடுத் துக்கொண்ட அதே தேசிய உரி மையை நீக்ரோக்களுக்கும் செவ் விந்தியர்களுக்கும் வழங்குங்கள்'' என்றுதான் கூறமுடியும். ஆனுல் வரலாற்றில் எந்த ஒரு பாவமும் புரியாத நாம் குடியேறிய நாடு களை தமது கடுமையான உழைப் பினுல் வாழவைக்கும் தொழிலா ளரது நிலைமை என்ன? அவர்

(தொடர்ச்சி 18 ம் பக்கம்)

# உணவு உற்பத்தி

— வரதன்

அரசியல் ரீதியில் சமூகநீதியின் கண்ணோட்டத்தில் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்குத் தனிநாடு தேவைஎன்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான போராட்டத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் ஆதரிக்கின்ற நிலை இன்றுள்ளது. அரசியல் ரீதியிலும் புவியியல் ரீதியிலும் பிரிவினை சாத்தியமானது என்ற போதிலும் பொருளாதார ரீதியில் எம்மால் தனித்து இயங்க முடியுமா? என்ற ஒரு கேள்வி நீண்ட நாட்களாகவே எல்லோர் மனதிலும் உண்டு. ஆனல் இன்று விடுதலைக்காகப் போராடும் விடுதலை இயக்கங்கள் இவ்விடயத்தைப் பற்றிய தமது கருத்துக்களை, தீர்வுகளை மக்கள்முன் வைக்கவில்லை என்றே கூறல்வேண்டும்.

உண்மையிலேயே பொருளாதார ரீதியில் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம் — ஒதுக்கப்படுகின்றோம் என்ற உணர்வின் அடிப்படையிலேயே தமிழ் ஈழம் என்ற கருத்து மக்கள்முன் வைக்கப்பட்டது. கல்வி, வேலைவாய்ப்பு, குடியேற்றம் ஆகிய விடயங்களில் நாம் பெரும்பான்மை இனத்தினரால, அரசாங்கத்தினுல் புறக்கணிக்கப்பட்டோம். இதனுல் எமது கல்வி, தொழில், காணி என்பனவற்றைப்பெரும்பான்மை இனத்தினரிடம் பறிகொடுக்கத் தொடங்கினேம். முன்னர் தொழில், காணி போன்றவற்றைப் படிப்படியாக இழந்து வந்தபோதிலும் கிளர்ந்தெழாத இளைஞர் சமுதாயம், 1971ஆம் ஆண்டு கல்வியின்மீது அரசு தனது கோரக் கரங்களை வைத்தபோது போராட்டத்தில் இறங்கியது. இன்றைய விடுதலைப் போராட்டத்தின் அத்திவாரம் இதுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றும் இத்தகைய பாதிப்புக்கள் தமிழினத்திற்கு இருந்துகொண்டே வருகின்றது. எனவே எப்பிரச்சனைகளின் தீர்வாக தமிழீழக் கோரிக்கை எழுந்ததோ அதே பிரச்சனைகள் இன்றும் நிலவுகின்றது. ஆனல் ஆச்சரியம் என்னவெனில் மக்கள் அதனைப்பற்றி முன்புபோல பெரிதுபடுத்திச் சிந்திப்பதில்லை என்பதேயாகும் இன்று மக்கள் சிந்திப்பது இராணுவ நெருக்கடி என்ற பிரச்சனையையே! அதுமட்டுமன்றி விடுதலை இயக்கங்கள் மக்கள்முன் வைக்கின்ற பிரச்சனையும் அதுவேயாகும்.

இன்று அரசு ஒருபக்கம் இராணுவ ரீதியில் மக்களை நசுக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றது. மறுபக்கம் பொருளாதார ரீதியில் மக்களை நசுக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்துள்ளது. இதன் முன்னோடி நடவடிக்கையாக வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நிதி இராணுவ நடவடிக்கைக்கு திசை திருப்பப்படுகின்றது. இந்நடவடிக்கை இரு விளைவுகளை ஏற்படுத்துகின்றது. ஒன்று, வடக்கு-கிழக்கின் அபிவிருத்தி தடைப்படுகின்றது. இதன் பாதிப்புக்களை உடனடியாக உணரமாட்டோம். நீண்டகாலப் போக்கில் அனுபவிப்போம். இரண்டாவது வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கை பலப்படுத்தப் படுகின்றது. இதன் விளைவுகளை உடனடியாகவே உணர ஆரம்பித்துள்ளோம்.

அரசு இராணுவரீதியில் மக்களை நசுக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்போது அதற்கு எதிராக இயக்கங்கள் நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தயாராகிக் கொண்டு வருகின்றன என்பது உண்மையே இதுவரவேற்கத்தக்கதாகும். ஆனல் பொருளாதார ரீதியில் எம்மை அரசு நசுக்கும்போது அதற்கு எதிராக விடுதலை இயக்கங்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்கின்றன என்பதனையும் அறிய மக்கள் ஆவலோடு உள்ளனர். இராணுவ நடவடிக்கைகள் போராட்டங்களே விடுதலைக்கு வழிவகுக்கும் என்பது எவ்வளவுக்கு உண்மையோ அவ்வளவுக்கு அடைந்த விடுதலையை உறுதிப்படுத்துவதற்கு முன்கூட்டியே பொருளாதார நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதும் உண்மையாகும். இன்று நாம் எமது அத்தியாவசிய தேவைகளான உணவுப் பொருட்கள், எரிபொருள், மின்சாரம் போன்றவற்றிற்காக சிறிலங்காவிலிருந்து வரும் லொறிகளையும் பெற்றேலிய பவுசர்களையும் மின்சாரம் தாங்கிவரும் கம்பிகளையுமே நம்பியிருக்கின்றோம். அதேபோன்று வடக்கு-கிழக்கின் உற்பத்திப் பொருட்களின் சந்தையும் சிறிலங்காவேயாகும்.

இந்நிலையில் இத்தொடர்புகள் முற்றுகத் துண்டிக்கப்படும்போது தமிழீழ மக்களின் நிலை என்ன? விடுதலைப் போராட்டம் என்பது தனித்து இராணுவ நடவடிக்கைகள்தான் என எண்ணுவது அறி

யாமையாகும். விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளுக்கு ஏனைய நாடுகளின் வரலாற்றின் உதாரணம் எடுப்பவர்கள் ஒன்றைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அந்நாடுகளில் விடுதலைப் போராட்டங்களின்மூலம் நாடு முழுவதும் விடுதலை இயக்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது, இந்நிலையில் அவ்விடுதலை இயக்கங்கள் எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடிகள் ஒருவகையானது. ஆனுல் தமிழ்ப் பிரதேசத்தின் நிலை அவ்வாறுனதல்ல. இங்கு இலங்கை முழுவதனையும் கைப்பற்றுவதற்குப் போராட்டம் நடைபெறவில்லை. இலங்கையின் ஒரு பகுதியாக அதில் தங்கியிருக்கின்ற தமிழர் பாரம்பரிய பிரதேசத்தை மட்டுமே கைப்பற்றப் போராட்டம் நடக்கிறது. இந்நிலையில் எதிர்நோக்கப்படும் பொருளாதார நெருக்கடிகள் வேறுவகையானதாகும். எனவே விடுதலையடையும் கட்டத்தில் எழக்கூடிய பொருளாதார நெருக்கடிகள் என்ன? அவற்றிற்கான தீர்வுகள் என்ன? என்பவற்றை முன்கூட்டியே தீர்மானித்தல், அதற்கான கொள்கைகளை வகுத்தல் என்பன அவசியமாகும். இச் சந்தர்ப்பத்தில் வங்காள தேசத்தின் விடுதலையை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். பொருளாதாரத் திட்டங்கள் எதுவுமின்றி பாகிஸ்தானின் அடக்குமுறைகளிலிருந்து விடுதலை பெறுவதனை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இந்தியாவின் உதவியோடு சுதந்திரம் கண்ட அந்நாடு இன்று பொருளாதார நெருக்கடிப் பொறியில் சிக்குண்டு உலகின் வறுமை நாடுகளின் பட்டியலில் முதலிடம் பெற்றிருப்பது கண்கூடு. இந்நிலைமையினை தமிழ் மக்களும் அடையக்கூடாது என்பதில் நாம் அவதானத்துடன் இருத்தல் வேண்டும். எனவே அரசியல் ரீதியில் விடுதலை பெறுவதற்கான இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடுகின்ற அதேவேளையில் பொருளாதார ரீதியில் ஏற்படப் போகும் பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளையும் முன்கூட்டியே திட்டமிடுதல் அவசியமானதாகும். இவ்வாறுன கொள்கையின் முதற்படியாக தமிழ்ப் பிரதேசத்தின் உணவுத் தேவையும் அதனை நிறைவு செய்வதற்கான வழிவகைகள் எவை என்பதனையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் யாழ்ப்பாணம் (கிளிநொச்சி மாவட்டம் உட்பட) மன்னர், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. 1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி தமிழ் மாவட்டங்களின் மொத்த சனத்தொகை (தமிழர், முஸ்லீம்கள்) 18,11,436பேர். தமிழ்ப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் இலங்கைத் தமிழர் 5,12,332பேர். இப்பகுதிகளில் வாழும் இந்தியத் தமிழர் 7,49,742 பேர், இவர்களுள் இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியாவில் குடியேறியவர்களின் விபரங்கள் தெரியவில்லை. எனவே இந்தியத் தமிழர்களில் எவ்வளவுபேர் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேறியவர் என உறுதியாகக் கூற முடியாது. மேலும் சனத்தொகை என்பது பொதுவாக அதிகரித்துச் செல்லும் ஒரு காரணியாகும். எனவே, தமிழ்ப் பிரதேசத்தின் மொத்த சனத்தொகை எவ்வளவாக இருக்குமென இப்போது உறுதியாகக் கூறமுடியாது. எனினும் 1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி தமிழ்ப் பிரதேசத்தின் சனத்தொகை 30,73,525 பேர் ஆகும்.

தமிழ் மக்களின் பிரதான உணவுப்பொருள் அரிசியாகும். தமிழ்ப்பிரதேச மக்களுக்கு ஒரு வருடத்திற்கு 3,17,240 மெற்றிக்தொன் அரிசி தேவைப்படுகின்றது. தற்போது தமிழ் மாவட்டங்களில் பெரும்போககால நெல் உற்பத்தி 4,79,432 மெற்றிக் தொன் ஆகும். சிறுபோக கால நெல் உற்பத்தி 1,73,062 மெற்றிக்தொன் ஆகும். எனவே தமிழ் பிரதேசத்தின் வருடாந்த நெல் உற்பத்தி 6,52,494 மெற்றிக் தொன்னுகும். இதன்மூலம் 4,56 748 மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யப்படும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று எமது மொத்த அரிசித்தேவை 3,17,240 மெற்றிக்தொன். எனவே நாம் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைவது மட்டுமன்றி, ஏறத்தாழ 1,40,000 மெற்றிக் தொன் அரிசி மிகையாகவும் காணப்படும். இது மேலதிகமாக 13 லட்சம் மக்களுக்கு ஒரு வருடத்திற்கு அரிசி வழங்கப் போதுமானதாகும்.

தமிழ் பக்களின் மற்றுமொரு பிரதான உணவுப் பொருள் கோதுமை மா என்பதாகும். இது உள்நாட்டில் உற்பத்தி செய்யப் பட முடியாத, முழுவதும் இறக்குமதி செய்யப்பட வேண்டிய ஒரு பொருளாகும். தற்போதைய கணக்கின்படி வருடாந்தம் 92,400 மெற்றிக்தொன் கோதுமை மா தேவைப்படுகின்றது. எனவே இதன் இறக்குமதிக்காகப் பெருமளவு அந்நிய செலாவணியை செலவு செய்யவேண்டி நேரிடும். இந்நிலையில் நாம் எமது உணவுப் பழக்கத்தினை மாற்றுவது அவசியமாகும். அரிசியினது

நெருங்கிய பிரதியீட்டுப் பொருளாகக் கோதுமை மாவினை நாம் சருதுவதனுலேயே அது எமது பிரதான உணவுப் பொருளாக உள்ளது. எனவே அரிசி போதியளவு கிடைக்கக் கூடியதாக இருக்குமேயானுல் கோதுமை மா நுகர்வு தானுகவே வீழ்ச்சியடையும். மேலும் அரிசிக்கு நெருங்கிய பிரதியீட்டுப் பொருளாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை நுகரும் பழக்கத்திற்கு மக்களை ஊக்குவித்தல் வேண்டும். சோளம், குரக்கன், இறுங்கு, மரவள்ளிக்கிழங்கு போன்றவற்றை அரிசிக்கு அடுத்தபடியான உணவுப் பொருளாக நுகர்வதற்கு ஊக்குவித்தல் வேண்டும்.

தமிழ் மக்களினுல் நுகரப்படுகின்ற மற்றுமொரு பிரதான பொருள் சீனி என்பதாகும். எமக்கு வருடாந்தம் தேவைப்படுகின்ற சீனியின் அளவு 49,600 மெற்றிக்தொன் இங்கு தற்போது இரண்டு பெரிய சீனித் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 1. கந்தளாய் சீனித் தொழிற்சாலே. 2. இங்குரான சீனித் தொழிற்சாலே. தற்போதைய புள்ளிவிபரங்களின் படி கந்தளாய் சீனித்தொழிற்சாலையில் 11,500 மெற்றிக் தொன் சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது. இங்குரான தொழிற்சாலையில் 11,800 மெற்றிக் தொன் சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே தமிழீழத்தில் மொத்தம் 23,300 மெற்றிக் தொன் சீனி உற்பத்தி செய்யப்படும். இது எமது தேவையில் 50 வீதத்திற்கும் குறைவானதாகும். எனவே பனஞ்சீனி உற்பத்தியில் கூடுதலான கவனம் செலுத்துதல் அவசியமாகும். ஒரு பனை மரத்திலிருந்து பதநீர்க்காலமான 200 நாட்களுக்குப் பெறப்படும் பதநீரிலிருந்து 22.7 கிலோகிராம் சீனி உற்பத்தி செய்யமுடியும். எனவே வருடாந்த மொத்தத் தேவையான 49,600 மெற்றிக் தொன் சீனியை உற்பத்தி செய்வதற்கு 22 லட்சம் பனைமரங்கள் போதுமானதாகும். அதேவேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 70 லட்சம் பனைமரங்கள் உண்டு.

தெங்கு உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாம் தன்னிறைவு அடையமுடியாத நிலையிலேயே உள்ளோம். தமிழ் மக்களின் வருடாந்த தேங்காய் நுகர்வு 300 மில்லியன் தேங்காய்களாகும். வருடாந்தம் ஏறத்தாழ 12,265 மெற்றிக்தொன் தேங்காய் எண்ணெய் தேவைப்படுகின்றது, இதற்கு ஏறத்தாழ 100 மில்லியன் தேங்காய்கள் தேவைப்படுகின்றது. எனவே தமிழீழத்திற்கு வருடாந்தம் 400 மில்லியன் தேங்காய்கள் தேவைப்படுகின்றது. ஆனுல் தமிழீழத்தின் வருடாந்த தெங்கு உற்பத்தி 85 மில்லியன் தேங்காய்கள் மட்டுமே. தெங்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அதன் தேவையில் தன்னிறைவு அடைவதற்கும் பின் வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

1. ஹெக்டேயருக்கான சராசரி உற்பத்தியினை அதிகரித்தல். தற்போது ஒரு ஹெக்டேயருக்கான சராசரி உற்பத்தி 440 தேங்காய்களாகும். ஆனுல் தகுந்த உரப்பாவனை இருக்குமேயானுல் 10,000 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படலாம்.

2. தெங்கு பயிரிடப்படும் நிலப் பரப்பினை அதிகரிப்பதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

3. வீட்டுத் தோட்டங்களில் தென்னை பயிரிடுதலை ஊக்குவித்தல் வேண்டும். ஒரு குடும்பத்தின் உணவுக்குரிய தெங்குத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஆறு தென்னைமரங்கள் போதுமானதாகும்.

உப உணவுப் பயிர்ச் செய்கையைப் பொறுத்தவரையில் தமிழர் பிரதேசம் முற்றிலும் தன்நிறைவுபெற்ற நாடாகவே உள்ளது. குறிப்பாக வெண்காய உற்பத்தியைப் பொறுத்த வரையில் தன்னிறைவிற்கு மேலாகவே உற்பத்தி உள்ளது. வருடாந்தம் தேவைப்படும் வெண்காயம் 10,000 மெற்றிக் தொன்களாகும். தமிழ்ப் பிரதேசங்களில் பெரும்போக காலத்தில் 24,000 மெற்றிக் தொன்னும் சிறுபோக காலத்தில் 25,000 மெற்றிக் தொன்னும் உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே மொத்த உற்பத்தி ஏறத்தாழ 49,000 மெற்றிக்தொன் ஆகும். எனவே வெண்காய ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை ஆராய்வது அவசியமாகும். மேலும் மிளகாய், மரவள்ளிக் கிழங்கு, உழுந்து, பயறு போன்றவற்றில் தன்னிறைவு அடையக் கூடியவகையில் இங்கு உற்பத்தி நடைபெறுகின்றது.

மீன் உற்பத்தியைப் பொறுத்த வரையில் தன்னிறைவு காண்பது மட்டுமன்றி, ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்புக்களும் உண்டு. வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தின் சிபாரிசுப்படி நபர் ஒருவர் வருடமொன்றுக்கு 22 கிலோக் கிராம் மீன் சாப்பிடவேண்டும். இதன்படி தமிழ் பிரதேச மக்களின் வருடாந்த மீன்தேவை

ஏறத்தாழ 68,200 மெற்றிக் தொன் ஆகும். ஆனால் வருடாந்த மீன் உற்பத்தி 85,000 மெற்றிக்தொன் ஆகும். எனவே மீன் ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களையும் மீன் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை உருவாக்குவதற்குரிய வாய்ப்புக்களையும் ஆராய்தல் அவசியமாகும்.

எனவே உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் பெருமளவிற்குத் தமிழர் பிரதேசம் தன்னிறைவு உள்ள ஒரு நாடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இன்றுள்ள உற்பத்தி மட்டத்தினை அடிப்படையாகக்கொண்டே இந் நம்பிக்கை உள்ளது. எதிர்காலத்தில் குறிப்பாக விடுதலைப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் எமது பொருளாதார வளங்கள் அனைத்தும் சிறிலங்கா படைகளினால் அழிக்கப்படுமேயானால் இன்றைய எமது நம்பிக்கை எதிர்காலத்தில் பகற்கனவாக மாறி விடும். எனவே எமது பொருளாதார வளங்களைப் பாதுகாப்பது அதற்கான நடவடிக்கைகளை, எடுப்பது என்பன விடுதலைப் போராட்ட இயக்கங்களின் கடமையாகும் மேலும் வெறுமனே சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு வேறுசில உலக நாடுகளில் வெற்றியளிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை அப்படியே மாற்றமின்றி தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதாரக் கொள்கையாகப் புகுத்த முற்படுவது மடமையாகும். தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதார வளங்கள், அதன் சமுதாய அமைப்பு, உற்பத்தி அமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொருத்தமான பொருளாதாரக் கொள்கையைத் திட்டமிடுதல் அவசியமானதாகும். தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதார வளங்கள் பற்றிய தரவுகள், விபரங்கள் போன்றவற்றைத் திரட்டுதல், பின்னர் இவற்றை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையிலும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கக் கூடியவகையிலும், செல்வத்தினை, வருமானத்தினை சமமாகப் பகிரக்கூடிய வகையிலும் ஒரு பொருத்தமான பொருளாதாரக் கொள்கைதனைத் திட்டமிடுதல், பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய வழிவகைகளை ஆராய்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

---

# தோட்டத் தொழிலாளரைப் பற்றிய...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ''அந்நியர்களாக'' நடத்தப்படுகின்றனர். அகதிகளாக விரட்டப்படுகின்றனர். எனவே இது ஒரு தேசிய இனப்பிரச்சனை மாத்திரமல்ல ஒரு வர்த்தகப் பிரச்சனையும்கூட என்பது புலனாகவில்லையா?

பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்த ஐபர்ஜீக்கள் இந்நாட்டை சுரண்டுவதற்கு ''கௌரவ பிரஜைகளாக'' ஆக்கப்பட்டுள்ளனர் ஆனால் தமது வியர்வையாலும் இரத்தத்தாலும் இந்நாட்டின் பெரும்பகுதி அந்நிய செலவாணியை ஈட்டித்தரும் மலையகத் தமிழரை இந்தியர் எனக்கூறி, இரண்டாந்தர அடிமைகளாக ளாக நடத்தி, நாடற்றவராக, வாக்குரிமை அற்றவராக, தேசிய உரிமை அற்றவராக விரும்பிய போதெல்லாம் இனவெறியைத் தூண்டி கொள்ளை அடித்தும் கொலை செய்தும், கற்பழித்தும், கள்ளத்தோணி என அவமானப் படுத்தியும், உடமைகளை தீவைத்துக் கொளுத்தி, உயிரோடு அவர்களை அதில் தூக்கி எறிந்து சாம்பலாக்கியும் ...... மிருகத்தனமாக நடப்பதுதான் தேசிய தர்மமா?

இந்தியாவிலிருந்து இலங்கை வந்து குடியேறிய காரணத்தால் மலையக தமிழர் அந்நியரென்றால் இலங்கையில் வாழும் ஏனைய மக்களும் அந்நியர்தாம். அவர்களும் வேறு நாடுகளில் இருந்து வந்து குடியேறியவர்கள்தாம். இலங்கையில் நிலவும் பௌத்த, இந்து இஸ்லாம் மதங்கள்கூட அந்நிய சரக்குகள்தாம்.

இந்த வாதத்தை இப்படியே வளர்த்துச் சென்றால் சிங்கள மக்கள் வங்காளத்திற்கும், தமிழர்கள் இந்தியாவிற்கும், முஸ்லிம்கள் அரேபியாவிற்கும் திருப்பி அனுப்பப்பட வேண்டும் அப்படியானால் இலங்கை வேடருக்கும் வனவிலங்குகளுக்கும் மாத்திரமே சொந்தம். அது மாத்திரமல்ல அமெரிக்க கண்டத்தில் இருந்தும், அவுஸ்திரேலியாவில் இருந்தும் ''அந்நியர்கள்'' வெளியேறி ஐரோப்பாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் செல்ல வேண்டும். முழு உலகிலும் ஐந்தில் நாலு பகுதி இல்லாது சுத்திகரிக்கப்பட்டு விடும்.

# மேற்கு சகாராவின் விடுதலைப் போராட்டம்

உலகில் மிக முக்கிய கேந்திர ஸ்தானமான மேற்கு சகாரா கரையோரத்தில் மொரேக்க நாட்டுடன் மேற்கு சகாராப் பகுதியில் வளர்ந்துள்ள ''பொலிசாறியோ'' என்ற இயக்கத்தின் போராட்டம் ஒரு இழுபறி நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருகிறது.

மேற்கு சகாராவில் மக்கள் கூட்டம் யார் என்பதும் இவர்களில் வடக்கே இருக்கும் ''மொரேக்கோ'' நாட்டுடனும், தெற்கேயிருக்கும் மொறிட்டானியா நாட்டுடனும் உள்ள உறவு எத்தகையது என்பதும் எதற்காக மொறெக்கோ, மெறிட்டானியா ஆகிய நாடுகள் இந்த மேற்கு சகாராவுக்கு உரிமை கோருகின்றன என்பதும் இம்மேற்கு சகாரா பிரச்சனை குறித்து ஐ. நா. தாபனம், சர்வ தேச நீதிமன்றம் ஆகியன, கொண்டுள்ள நிலை என்பன கருத்தில் கொள்ளப்பட வேண்டியனவாகும்.

மேற்கு சகாரா வாசிகள் அல்லது சகாராவிஸ் என்று மேற்கு சகாராவில் இருப்போர் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அராபிய, கறுப்பு ஆபிரிக்கர்களின் வழி வந்தவர்கள்.

இவர்கள் தெற்கு மொரேக்கோவின் ''ஒட்ரு'' என்ற ''நைகர்'', ''செனகல்'' பள்ளத்தாக்குகளில் இருந்து பின்னர் படிப்படியாக போர், மண உறவுகள் ஆகியன மூலம் மேற்கு சகாராப் பகுதியில் குடியேறினர்கள் என அறியப்படுகின்றது.

இவர்களின் பொருளாதாரம் கால்நடை வளர்ப்பிலேயே தங்கியிருந்தது. ஒட்டகம் இவர்களின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகித்தது. இதனைப்போக்குவரத்திற்காகப் பயன்படுத்தியதுடன் இதன் பால், மாமிசம், தோல் ஆகியவற்றையும் பிரதான ஏற்றுமதிப் பண்டமாகக் கொண்டிருந்தனர்.

இவர்கள் இவ்வாறு கால்நடை வளர்ப்புடன்கூடிய ஒரு நாடோடி வாழ்க்கையை நடத்தி வந்தனர். இம் மககள்மீது இடையிடையே ''மொறெக்கோ'' நாட்டு ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்பை நடத்தியே வந்தனர். ஆயினும் நிரந்தர குடியிருப்புகளுடன் கூடிய வாழ்க்கையை இம்மக்கள் கொண்டிராததால் இவர்களின் பிரதேசத்தை அவர்கள் ஆக்கிரமிப்பதில் அதிக அக்கறை கொள்ளவில்லை.

ஸ்பானிய குடியேற்றம்

மேற்கு சகாரவுடனான முதலாவது ஐரோப்பியத் தொடர்பு 15ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டது போர்த்துக்கேய, ஸ்பானிய வர்த்தகர்கள் இப்பிரதேசம் மீது தமது கவனத்தை திருப்பினர். மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த மேற்கு சகாராப் பகுதியில் வாழ்ந்த மக்களை அடிமைகளாக்கி அவர்களை வியாபாரப் பண்டங்களாக்கினர். பின்னர் ''டக்லர்'' என்ற மேற்கு சகாராப் பகுதியில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டதும் இப்பகுதியில் போர்த்துக் கீசரின் சவனம் மேலும் அதிகரித்தது.

1884 ஆம் ஆண்டு ஸ்பானியர்கள் சாகாராமீது ஆக்கிரமிப்பு நடத்தினர். ஸ்பானியரின் காலனித்துவ விஸ்தரிப்பு நடவடிக்கை மிகவும் மெதுவாகவே இடம் பெற்றது. இக்கால கட்டங்களிலே இப்பிரதேசத்தின் அண்டைப் பகுதிகளான மொறேக்கோ, அல்ஜீரியா, மொறிட்டானியா ஆகிய நாடுகளிலும் பிரஞ்சு ஊடுருவல்கள் நிகழ்ந்தன. சில மேற்கு சகாரா சுதேசிகளின் தலைவர்கள் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதில் ஈடுபட்டனர். இறுதியாக 1934 ஆம் ஆண்டளவில் ஸ்பெயின் ஒருவாறு மேற்கு சகாராப் பகுதியில் பல கேந்திர இடங்களைச் கைப்பற்றி அப்பிரதேசத்தை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்தது

இப்பிரதேசத்தின் பொருளாதார நிலை மிகவும் மோசமாய் இருந்ததால் இப்பிரதேசம்பெரும் பாலும் ஸபானியர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தது. 1952இல் 216 உள்நாட்டு ஊழியர்கள் மட்டுமே இங்கிருந்தனர். தொலைபேசி பாவனையாளர்களும் முழு ஸ்பானிய சகாராவிலும் (மேற்கு சகாரா) 366 பிள்ளைகளே பாடசாலை சென்றனர், பெரும்பாலான சகாரா சுதேசிகள் இடையர்களாக பின்தங்கிய மக்கள் கூட்டத்தினராகவும்இருந்தனர்.

1958இல் ஸ்பானிய சகராப் பிரதேசம் யாவும் ஸ்பெயினின் ஒரு மாகாணமாக மாற்றப் பட்டது. இதன் நிர்வாகத்திற்கென ஒரு தேசாதிபதி நியமிக்கப் பட்டார். 1962இல் இப்பகுதி மாநகர ஆட்சிக்குட்பட்டது. 1975ம் ஆண்டு மே மாதம் இப்பகுதிக்கு விஜயம் செய்த ஐ. நா. குழுவொன்று இங்கு மிகவும் பின்தங்கிய நிலை காணப்பட்டதை அடுத்து ஸ்பெயினின் உதவியுடனும் அதன் நிர்வாகத்தின் கீழேயுமே இப்பகுதி வளர்ச்சியடைய முடியும் என உறுதிப் படுத்தியது.

மேற்கு சகராப் பிரதேசம் பொருளாதார ரீதியில் ஸ்பானிய நிர்வாகத்தின் கீழ் பெருமளவு வளர்ச்சியடையத் தொடங்கியது. 1974ஆம் ஆண்டளவில் மேற்கு சகராவின் பொருளாதார நிலை அதன் சிறிதளவு மக்கள் தொகையுடன் மேற்கு ஐரோப்பா மற்றும் வளைகுடா நாடுகளின் பொருளாதார நிலையுடன் ஒப்பிடக் கூடிய ளவு வளர்ச்சியடைந்தது.

### சமூக மாற்றங்கள்

1960 ஆம் ஆண்டுகளிலும் 70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் மேற்கு சகரா வாசிகளை நவீன மாற்றங்களுக்குள்ளாக்கியது. அவர்கள் தமது பின்தங்கிய வாழ்க்கை முறைகளைக் கைவிட்டு புதிய தொழில் வாய்ப்புக்கள், கல்வி, வர்த்தகம், போன்றவற்றில் கவனம் செலுத்தினர்.

### விடுதலை இயக்கங்கள்

மேற்கு சகராவில் ஸ்பானிய சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட நவீன மாற்றங்களைத் தொடர்ந்து 1960ஆம் ஆண்டில் ஒரு தேசிய விடுதலை இயக்கம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 'மொகமட் சித்தி இப்ருகிம்'' என்பவர் இதன் தலைவராக இருந்தார். 1970 ஆம் ஆண்டில் ஸ்பானிய எதிர்ப்பு நடவடிக்கையை இவர் ஆரம்பித்தார். இந்நடவடிக்கை முறியடிக்கப்பட்டு ''பசிறி'' கைதுசெய்யப்பட்டார். இவர் விடுதலை செய்யப்படாததால் பெரும்பாலும் இவர் இறந்திருப்பார் என்று சகராவாசிகள் கருதினர்.

இதனைத் தொடர்ந்து பல விடுதலை இயக்கங்கள் ஸ்பானிய ஆட்சிக்கெதிராக மேற்கு சகராவில் உருவாகத் தொடங்கின இறுதியாக 1975 மே 10இல் ''பொலிசாறியோ''இயக்கம் உதயமானது இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம் ஆயுதப் புரட்சி மூலம் மேற்கு சகராவின் ஸ்பானிய காலனித்துவத்தில் இருந்து விடுவிப்பதாகும்,

''பொலிசாறியோ'' இயக்கம் படிப்படியாக சிறிய தாக்குதல்களையும், ஏனைய இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்றது.

1975 ஆம் ஆண்டு மே மாதம் ஐ. நாவின் விசேட குழுவொன்று மேற்கு சகராவில் பயணம்செய்த போது பொலிசாறியோ இயக்கம் அங்கு பெற்றிருந்த செல்வாக்கை அறிந்தது. அது வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்திருப்பதாவது மேற்கு சகரா மக்கள் அனைவரும் சுதந்திரம் பெறுவதிலே அக்கறை காட்டுகின்றார்கள். இவர்கள் அயல் நாடுகளுடன் ஒருங்கிணைவதை விரும்பவில்லை. பொலிசாறியோ இயக்கம் சுதந்திரத்தை பேறும் நடவடிக்கையிலேயே உழைப்பதை காணமுடிகின்றது.

1975-76இல் மொறோக்கோ, மொறிட்டானியா ஆகியன ஸ்பானிய சகராவுடன் இணைக்கப்பட்ட பின்னர் பொலிசாறியோ இயக்கம் மேலும் மும்முரம் அடைந்தது ஆண்கள் பலர் இந்த இயக்கத்தின் கொரில்லா இராணுவ நடவடிக்கைகளில் இறங்கலானார்கள். இதனால் பல பெண்கள் அகதிகளாக அல்ஜீரியா நாட்டிற்குச் சென்றனர்.

பொலிசாறியோ இயக்கம் முழு அளவிலான பிரதேச சுதந்திரமில்லாத மேற்கு சகராப் பிரச்சனைகளுக்கான தீர்வை விரும்பவில்லை. இவ்வியக்கம் முழு மேற்கு சகராவும் சுதந்திரமடைய வேண்டும், இல்லையேல் தியாக மரணப் போராட்டம் தொடரும் என உறுதி கொண்டது.

பொலிசாறியோ இயக்கம் சகல ஏகாதிபத்திய காலனித்துவ சுரண்டல் நடவடிக்கைகளையும், எதிர்த்த அதே வேளை தேசிய சோசலிச அமைப்பொன்றை உருவாக்குவதிலும் உறுதியாக இருந்தது. அதன் சோசலிசமானது மாக்சிய தத்துவங்களில்லாது இஸ்லாமிய மதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது, இவ்வியக்கம் கல்வி, குடியேற்றம், மற்றும் சுகாதார வசதிகள் பான்ற துறைகளில் பல முற்போக்கான கொள்கைகளைக் கொண்டிருந்தது. பெண்களுக்கு அரசியல், சமூக அந்தஸ்துகளை வழங்குவதுடன் அவர்களின் சகல துறைகளையும் அணுகச் செய்து தேசிய மட்டத்திலான நாட்டு வளர்ச்சியை ஏற்படுத்த விரும்பியது,

### பிரதேச உரிமை

மொறோக்கோ 1956 ஆம் ஆண்டு சுதந்திரமடைய இருந்த

போது மொறோக்கோ, அல்ஜீரிய சகாரா, மேற்கு சகாராவின் முழுப் பகுதி, மொறிற்ருனியா, உட்பட மாலி நாட்டு வடமேற்குப்பாகத்தின் ஒரு சிறு பகுதியையும் உள்ளடக்கிய பிரதேசம் தனக்குச் சொந்தமானதென உரிமை பாராட்டியது.

மொறிற்ருனியா 1960 ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்த போதும் கூட அதனை அங்கீகரிக்காது அது தனக்கே உரியதென தெரிவித்தது.

இதே வேளை மொறிற்ருனிய. மேற்கு சகரா தனக்கே உரியதென உரிமை பாராட்டியது. 1957ஆம் ஆண்டு மொறிற்ருனியாவின் அரசாங்க கவுன்சிலின் உபதலைவரான ''ஹல்டாடா'' என்பவர் ஸ்பானிய சகாரா (மேற்கு சகாரா) வில் இருப்போரும் நாமும் ஒரே மொழி, ஒரே சமயம், ஒரே வாழ்க்கை முறை என்பவற்றையே கொண்டிருப்பதால் மேற்கு சகாரா மக்கள் எம்முடனேயே இணைய வேண்டும என்று தெரிவித்தார்.

இதே வேளை மேற்கு சகாராவில் பிரதேச உரிமை கோரும் மொறோக்கோவும், மொறிட்டானியாவும் மேற்கு சகாராவின் ஸ்பானிய எதிர்ப்பு இயக்கங்களுக்கு எதுவித உதவியும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

1961 ஆம் ஆண்டு மொறோக்கோ அரச பீடம் தன் நாட்டிலிருந்து புதிய ஸ்பானிய எதிர்ப்பு இயக்கம் இயங்குவதை அனுமதிக்கவில்லை.

1970 ஆம் ஆண்டில் மொறிற்ருனியா, மொறோக்கோ, ஆகியனவற்றின் தலைவர்கள் சந்தித்துக் கொண்ட பின்னர். 1973 ஆம் ஆண்டு இடம்பெற்ற உச்சி மகாநாடொன்றின் மேற்கு சகாரா சுயாட்சி பெற வேண்டும் என்று ஐ. நாவின் கோரிக்கையை கூட்டாக ஏற்றுக் கொண்டனர்.

**சர்வதேச ஸ்தாபனங்களின் பங்கு 1965—1974**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1965ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடத்திய வாக்கெடுப்பில் 100:2 என்ற அடிப்படையில் மேற்கு சகரா சுதந்திரமடைய வேண்டும் என்ற கோரிக்கைக்கு உலக நாடுகள் வாக்களித்தன.

ஸ்பெயின், போத்துக்கல் என்பனவே எதிராக வாக்களித்த இரு நாடுகள் ஆகும். இதைத் தொடர்ந்து ஐ. நா ஸ்பெயினிடம், ஸ்பானிய சகராவின் (மேற்கு சகாரா) சுதந்திரத்துக்கான ஏற்பாடுகளை செய்யும்படி கேட்டுக் கொண்டது.

இத்துடன் ஸ்பெயின், மொறோக்கோ, மொறிட்டானியா, ஆகியவற்றுடன் மேற்கு சகாரா குறித்து பேசவேண்டும் என்றும் ஐ. நா. சபையார் கேட்கப்பட்டார். இதே வேளை ஸ்பானிய ஆட்சி மேற்கு சகராவில் இருந்து வாபஸ் பெறப்படும் போது அப்பிரதேச மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்து நிச்சயமற்ற தன்மையே காணப்பட்டது. ஏனெனில் மொறோக்கோவும், மொறிட்டானியாவும் மேற்கு சகாராவிற்கு உரிமை கூறியதே இதற்குக் காரணமாகும் இதனையடுத்து ஐ. நாவில் இரண்டாவது தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தில் மேற்கு சகாராவில் ஆட்சிப் பொறுப்புக்கள் குறித்து சர்வஜன வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட வேண்டும் என ஸ்பெயின் கேட்கப்பட்டது.

**சர்வஜன வாக்கெடுப்பிற்கான ஸ்பெயினின் திட்டம்**

1974 ஜூலையில் பிரதேச சுயாட்சி மேற்கு சகாராவிற்கு வழங்குவதென ஸ்பெயின் தீர்மானித்தது: இக்காலப் பகுதியில் மேற்கு சகாரா உள்நாட்டரசாங்கம் சுதந்திரத்துக்கான வழிவகைகளை அமைப்பதிலும் ஆர்வம் காட்டியது. அத்துடன் ஸ்பானிய அரசாங்கம் 1975இன் முதல் அரைப்பகுதியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதெனவும் அறிவித்தது. இதேவேளை 1974 ஆம் ஆண்டிறுதியில் ஸ்பானிய அதிகாரிகள் சாதாரண அரசியல் கட்சியொன்றை ''ஹல்ட் றசீட்'' என்ற 27 வயதான ஸ்பெயினில் பயின்ற பொறியியலாளரது தலைமையில் ஆரம்பிக்க உதவியது இக்கட்சியை பொலிசாறியோ இயக்கத்தின் செல்வாக்கிற் கெதிராகவும் ஸ்பானிய ஒத்துழைப்புடன் மேற்கு சகாராப் பிரதேசத்தில் சுதந்திரமாக இட்டுச் செல்லச் செய்வதுமே நோக்கமாகும்.

இதே வேளை மொறோக்கோ மன்னன் ஹசன்'' 1974-ஆம் ஆண்டு தமது நாட்டின் தெற்குப் பகுதியில் ஒரு பிரதேசம் கைப்பாவையாக இருப்பது ஏற்றுக் கொள்ள முடியாதெனக் கூறி தமது பிரதேசங்களை மீண்டும் தமது நாடு பெற வேண்டுமென வலியுறுத்திக் கூறினர். இதன் மூலம் மொறோக்கோ மன்னன் தமது நாட்டில் 1970களின் ஆரம்பத்தில் இடம்பெற்ற சதிப் புரட்சிகளால் சீர்குலைந்திருந்த தமது நாட்டவர் மத்தியில் புதிய உத்வேகத்தை ஊட்டினர்.

அத்துடன் ஐ. நா சபைக்கும் மேற்கு சகாராவின் சுதந்திரம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுவதனையும் கண்டித்து அந்த சர்வஜன வாக்கெடுப்பை மொரோக்கோ எதிர்க்கும் என தெரிவித்தார். இதேவேளை டிசம்பர் 1974இல் ஐ.நா. மூலமாக சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திப் போடச் செய்யவும் ''ஹசன்'' நடவடிக்கை எடுத்தார். கூடவே மேற்கு சகாரா மீது மொறிட்டானியா பாராட்டும் உரிமை குறித்தும் அந்நாட்டுடன் இரகசிய நடவடிக்கையில் இறங்கி மேற்கு சகாரா பிரிக்கம் பட வேண்டுமென வலியுறுத்தினர்.

இது விடயமாக ஸ்பெயினை ஆத்திரமடையச் செய்யும் வகையிய் ஸ்பானிய மீன்பிடிப் படகுகளை மொரோக்கோ கரைகளுக்கு அப்பால் இடையூறு செய்வதிலும் ஏனைய அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் மொரோக்கோ இறங்கியது.

**ஸ்பெயின் நிச்சயமற்ற நிலை**

மொரோக்கோவினுல் எழுந்த நெருக்கடி நிலை காரணமாக ஸ்பெயின் சர்வஜன வாக்கெடுப்பை கைவிட்டு இறுதியில் அதனை நடத்தவேயில்லை. இதே வேளை ஸ்பானிய அரசாங்கமும் பொலிசாறியோ இயக்கத்திடம் நிர்வாகப் பொறுப்புகளை கையளிக்க முடிவு செய்தது அவ்வியக்கமும் தனது கெரில்லாத் தாக்குதல்களை நிறுத்திக் கொண்டதுடன் ஸ்பெயின், பொலிசாறியோ ஆகியனத்தமது கைதிகளையும் பரிமாறிக் கொண்டன.

இதே வேளை சர்வதேச நீதி மன்றததிலும் மேற்கு சகாராப் பிரச்சனை கொண்டு வரப்பட்டது. இந்நீதி மன்றம் மேற்கு சகாரா மொரோக்கோவுடனே, மெறிட்டானியாவுடனே எதுவித அரசியல் உறவுகளையும் கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்ததுடன் மேற்கு சகாராப் பிரதேச மக்கள் சுதந்திரம், தன்னுநிக்க முடைய மக்கள் என்பதை உறுதிப்படுத்தியது.

சர்வதேச நீதிமன்றம் ஆலோசனையாகத் தெரிவித்த அபிப்பிராயம் பதிப்பில் வெளிவந்த சில மணி நேரங்களில் மொரோக்கோ மன்னன் ''ஹாசன்'' 3 இலட்சத்து ஐம்பதினுபிரம் மொரோக்கோ தொண்டர்கள் கையில் புனித குர்-ஆனை ஏந்தியபடி மேற்கு சகாராவினூடாக மொரோக்கோவுக்கு அதன் மீதுள்ள உரிமையை வலியுறுத்தும் வகையில் ஊர்வலம் ஒன்றை நடத்துவார்கள். என்று அறிவித்தார். இஸ்லாமிய மத அடிப்படையில் அம்மதத்தின் புனித நிறமான பச்சை நிறத்தின் பெயரில் பச்சை ஊர்வலம் எனவும் அந்த ஊர்வலத்திற்குப் பெயரிடப்பட்டது.

இவ்வூர்வலம் முற்றிலும் ஓர் அரசியல் உத்தியாகும் இந்த ஊர்வலத்திற்கு எதிராக பொலிசாறியோ இயக்கம் ஆட்சேபித்தது. ஸ்பானிய அரசாங்கமும் ஐ. நா. பாதுகாப்புச் சபையிடம் இது குறித்து முறையிட்டது. இறுதியில் ஊர்வல எதிர்ப்பு முயற்சி ''மட்றிட்டில்'' ஏற்பட்ட மோசமான நிலைமை காரணமாக கைவிடப்பட்டது. ஒக்டோபர் 17ஆம் திகதி '' ஜென்றல்'' ப்ராங்கோ (வயது 82) நீண்டகடும் சுகயீனத்துக்குள்ளானர். இதனுல் ஸ்பானிய அரசின் கொள்கைகளில் சில மாற்றங்கள் இடம் பெற்றன. மொரோக்கோவுடன் மோதலைத் தவிர்த்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதென ஸ்பெயின் முடிவு செய்தது.

பச்சை ஊர்வலக் காரர்கள் ''ராபயர்''வினுள் நுழைந்தார்கள். இதனுல் மேற்கு சகாராவின் மொரோக்கோ எல்லைப்பகுதியுள் இருந்து மக்கள் குடிபெயரத் தொடங்கினுர்கள். எல்லைப் பகுதியில் இருந்து ஸ்பானியத் துருப்புகளும் குறிப்பிடத்தக்க சில தூரங்கள் வரை வாபஸ் பெறப்பட்டன. ஸ்பானிய இராணுவம் மொரோக்கோ ஊர்வலக் காரர்களை இடைமறிக்க முடியவில்லை இதனுல் மொரோக்கோ வாசிகள் எல்லைப் பகுதியில் கைவிடப்பட்ட பகுதிகள் சிலவற்றுள் நுழையத் தொடங்கினர்.

மொரோக்கோவின் இந்த நடவடிக்கையினுல் அல்ஜீரியா, உசார் அடைந்தது. பொலிசாறியோ இயக்கத்திற்கு உதவிசெய்ய 1975ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இது முன்வந்தது. ஸ்பெயினுக்கும் மொரோக்கோவிற்கும் இடையில் பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அவ்வேளை அல்ஜீரியா ஸ்பெயினுக்கு தனது எதிர்ப்பை தெரிவித்தது, ஐ. நா. செயலாளர் நாயகம் ''கேட்வால்ட் ஹெய்ம்'' தற்காலிக ஐ. நா. நிர்வாகம் ஒன்றை மேற்கு சகாராவில் ஏற்படுத்தும் யோசனையை ஐ. நாவில் பிரேரித்தார்.

இவ் வேளை மொரோக்கோவுக்கும், ஸ்பெயினுக்கும் இடையில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. இதனையடுத்து மொரோக்கோ மன்னன் தமது பச்சை ஊர்வலக்காரர்களை மேற்கு சாக

ராவின் எல்லையைக் கடக்கும்படி உத்தரவிட்டார். எல்லைப் பகுதியில் இருந்து ஸ்பானியத்துருப்புகள் பின்வாங்கிய சுமார் 8மைல் தூரம்வரை ஊர்வலக்காரர்கள் சென்றனர். மூன்று தினங்களின் பின்னர் மொரோக்கோவின் நோக்கம் நிறைவேறிவிட்டதாகக் கூறி ஊர்வலக்காரர்களை தாயகம் திரும்புமாறு மன்னர் ''ஹாசன்'' கேட்டுக் கொண்டார்.

நவம்பர் 12-ல் மீண்டும் ஸ்பெயின் மொரோக்கோ பேச்சுகள் ஆரம்பமாயின. இரு தினங்களுக்குப் பின்னர் இணக்கம் ஒன்று மொரோக்கோ, ஸ்பெயின், மொறிட்டானியா ஆகியவற்றினால் காணப்பட்டது. இதன் விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன. நிபந்தனை அடிப்படையில் சுருக்கமாக மட்டும் அவ்விணக்க விபரங்கள் சில வெளியிடப்பட்டன. அவ் விபரங்கள் தற்காலிகமாக கூட்டாக மேற்கு சகராப் பகுதியில் ''டிஜேமா''பிரிவுடன் நிர்வாகம் செலுத்தும் என்றும் ஸ்பெயின் இறுதியில் 1976ஆம் ஆண்டு பெப்ரவரி இறுதிப் பகுதியில் வாபஸ் ஆகும் என்றும் ''டிஜேமா'' மூலமாக தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்கு சகாரா மக்களின் அபிப்பிராயங்கள் மதிப்பளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து மேற்கு சகாரா மொரோக்கோ, மொறிட்டானியா ஆகியவற்றிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்நாடுகளின் இராணுவத்தையும் மேற்கு சகாராவினுள் 1000க் கணக்கில் வரவும் ஸ்பெயின் அனுமதியளித்ததோடு தனது துருப்புக்களையும் வாபஸ்பெற ஸ்பெயின் இணங்கியது.

இவ்-வுடன் பாட்டிற்குப் பதிலாக ஸ்பானிய அரசாங்கம் மேற்கு சகாரா, மொரோக்கோ, கரையோரப்பகுதிகளில் தான் மீன் பிடிப்பதற்கான உததரவாதத்தையும் பாதுகாத்துக் கொண்டது.

மற்றிட் உடன்பாடுகளையடுத்து இரு வாரங்களில் புதிய தற்காலிக முப்பிரிவு ஆட்சி மேற்கு சகராவில் ஆரம்பமானது. 1976 நடுப்பகுதியில் இங்கிருந்தும், ஸ்பானியத் துருப்புகள் பல முக்கிய நகரங்களை மொறிட்டானிய, மொரோக்கோ நிர்வாகங்களிடம் கையளித்துவிட்டு வெளியேறத் தொடங்கின.

''பொலிசாறியோ'' இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து பல சிறிய குடியிருப்புகளும், மொரோக்கோ அல்லது மொறிட்டானியா படைகளால் பலத்த சண்டையில் பின்னர் மேற்கு சகாராவில் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து ''பொலிசாறியோ'', ''டிஜேமா'' இயக்கங்கள் மிகவும் விழிப்படைந்தன. இக்கட்டத்திலேயே ஸ்பெயினும் தனது 91வருட மேற்கு சகாரா காலனித்துவ ஆட்சியையும் முடித்துக் கொண்டது,

—தொடரும்

### ஐ. நாவின் பிரதி பலிப்பு

''மட்றிட்'' உடன்பாட்டை தடுக்கும் வலிமையற்று ஐ. நா. காணப்பட்டது. ஐ. நா. செயலாளர் ''வால்ட் ஹெய்ம்'' ஐ. நா. விற்கான சுவீடன் தூதுவரை மேற்கு சகாராவில் நிலைமையை ஆராயும்படி அனுப்பி வைத்தார். 1976 பெப்ரவரி 7 முதல் 12 வரைதெற்கு சகாராவில் சுற்றுப்பயணம் செய்த சுவீடன் தூதுவர் அங்கு நிலவும் சூழ்நிலையைக் கண்டு வியப்படைந்தார்.

''கெரில்லா'' எதிர்ப்புகள் தெற்கு சகாராவில் மொரோக்கோ, மொறிட்டானிய நிர்வாகத்திற்கு எதிராக உக்கிரம் அடைந்திருந்தன. இதனால் அங்கிருந்தும் பலர் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருந்தனர். இந்நிலமைகளை ஐ. நா. செயலாளருக்கு சுவீடன்பிரதிநிதி எடுத்து விளக்கினார்.

**பிரிவினை:-**

மேற்கு சகரா இறுதியில் மொரோக்காவினாலும் மொறிட்டானியாவினாலும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. $\frac{2}{3}$ பகுதியை மொரோக்கோவும் எஞ்சியதை மொறிட்டானியாவும் பகிர்ந்து கொண்டன.

> ஒருவன் தான் செய்த தவறை ஒப்புக்கொள்ள வெட்கப்படக் கூடாது. ஒப்புக்கொள்வதன்பொருள் என்ன? அவன் நேற்றையை விட இன்று அதிக அறிவு பெற்றிருக்கிறான் என்பதே,
>
> — போப் —

**அகதிகள்:-**

1976ஜனவரி 7இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சுமார் 40,000 மேற்கு சகரா வாசிகள் தமது இருப்பிடங்களில் இருந்தும், வெளியேறிவிட்டனர் என அறிவித்தது. இவர்களில் அரைவாசிப் பேர் அல்ஜீரியாவிற்கும், எஞ்சியவர்கள் மேற்கு சகாராவின் தொலைவில் இருந்து மறைவிடங்களையும் நாடி அகதிகளாக சென்றுள்ளனர் என்று அறிவித்தது.

# களத்தில் புகுந்தவளைப் பற்றி.... அவள் அன்னை-

ஒரு மகளைக் கெரில்லா போராளியாகத் தன் தாய் நாட்டுக்கு ஈந்த ஒரு சாதாரண நிக்கரகுவன். தாயின் மன உணர்வுகள் இதில் பிரதிபலிக்கப் படுகின்றன.

டோரா மரியா — 1978-ல் எஃப் எஸ். எல். என். கோட்டையைத் தாக்கியபோது இரண்டாவது தளபதியாக இருந்தவர் இவர். 1976-ல் எஃப். எஸ். எல். என் இயக்கத்தில் சேர்ந்து கொண்டாள், இவளது தந்தையார் சாதாரண பாட்டாளி வர்க்கத்தைப் பின்னணியாகக் கொண்டவர்; தாய் சாதிவெறி பிடித்த ஒரு குடும்பப் பின்னணியைக் கொண்டவள். பின்னர் சிறிய தையல் நிறுவனம் ஒன்றில் தையல் தைத்து வந்ததால் தனது ஏனைய குடும்ப உறுப்பினர்களாலேயே தூக்கி எறியப்பட்டவள்; அவளது பெயர் மரியா டோரா. மரியா டோரா இங்கு கெரில்லாப் பேராளியாக மாறிய தனது மகளைப் பற்றி இங்கு கூறுகிறார்.

டோரா மரியா எனது மகள். வெகு முன்னெச்சரிக்கையானவள். திறந்த மனம் படைத்தவள் அவள். அவளுக்கே உரிய குணம்சங்களைக் கொண்டிருந்தாள். ஆனால் நான் ஒருபொழுதும் அவள் ஒரு கெரில்லாப் போராளியாக மாறுவாள் எனக் கற்பனை செய்துகூடப் பார்க்கவேயில்லை. ஒருமுறை அவள் கல்வி கற்ற பாடசாலையில் இடம்பெற்ற பகிஷ்கரிப்பு ஒன்றில், அவள் பங்கு கொண்டது எனக்கு இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. அவள் ஒருவரையும் குறை கூறுவது கிடையாது. அதற்காக, எல்லாரது பழியையும் தனி ஒருத்தியாகத் தன் மேல் சுமத்திக் கொள்வாள்; அவள் மிகவும் உறுதியான குணநடைகள் உள்ளவள்; அவள் அழகானவள்; கீழ்ப்படிவானவள்.

பூகம்பத்தினால் நிக்கரகுவாவின் சில பகுதிகள் அழிவிற்குள்ளாகி இருந்தபோது, எனது மகள் அரசியலில் ஈடுபடத் தொடங்கியிருந்ததை என்னால் உணரமுடிந்தது. இப்பூகம்பத்தைத் தொடர்ந்து, மனாகுவாவில் இருந்து நீங்கிய பிரஜைகள் பற்றிய குடிசன மதிப்பீட்டில் மாணவர்கள் ஈடுபட்டனர். நான் அதனை வெறுமனே ஒரு குடிசன மதிப்பீடாக மட்டுமே எண்ணினேன்; ஆனால் மாணவர்களோ அந்த ஏழை அயலவர்களைச் சந்தித்து அவர்கள் இத்தகைய கஷ்டநிலைக்குத் தள்ளப்பட்டதற்கான காரணங்களை அறிந்து நிவர்த்திசெய்வதிலும், பெரும் ஆர்வம் கொண்டிருந்தனர்; பின்னர் பங்குனி 1972இல் டோராவிற்கு வியோனிலுள்ள பல்கலைக் கழகத்தில் கல்வி கற்க அனுமதி கிடைத்தது. வியோன் பல்கலைக்கழகம் அரசியல் போன்ற விவகாரங்களில் ஈடுபடத் துடிப்பவர்களுக்கு வழிசமைத்துக்கொடுக்கக்கூடிய இடம். எனவே எங்கே அவள் இவற்றிலெல்லாம் ஈடுபட்டுவிடப்போகிறாளோ என வெகுவாகப் பயந்தேன்; எனவே அவளை அப்பல்கலைக்கழகத்திற்குச் செல்லவேண்டாம் என நான் கேட்டுக்கொண்டேன்; ஆனால் அவளோ எப்படியோ அங்கு சென்றுவிட்டாள்.

அவளைக் கவனமாக இருக்கும்படி கூறினேன், அவள் குழந்தையாக இருந்தபோது மருத்துவக் கல்வி பயில ஆசைப்பட்டவள்; அதுதான் அவளது ஒரே கனவாக இருந்தது. ஆனால் அவள் அரசியலில் ஈடுபடுவாளேயானால் பட்டம் பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தை அவள் இழந்துவிட நேரிடும் எனக் கூறினேன்; அவளும் ஏற்றுக்கொண்டாள். இவற்றிற்காகத் தனது கல்வியை அலட்சியப் படுத்தமாட்டேன் எனக் கூறினாள். ஆனால் 'கெமா கஸரிலோ' வின் வீட்டை எஃப் எஸ் எல் என் ஆக்கிரமித்துக் கொண்டபோது, அவள் மிகப் பரபரப்பாகவும், சந்தோஷமாகவும் இருந்ததை என்னால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அவள் கடைசியில் தலைமறைவாகிச் சென்றுவிட்டாள்; அவள் தலைமறைவாகிச் செல்கையில் எமக்காக ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டுச் ன்றிருந்தாள்; கடைசியாக ஜனவரி 1976இல் தான் நாம் அவளைக் கண்டோம். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை; அவளது வகுப்புக்கள் அடுத்தநாள் ஆரம்பமாக இருந்தன. பின்பு நாம் ஒருபோதும் அவளைக் காணவேயில்லை; இங்ஙனம் அவள் எம்மை விட்டுச் செல்வாள் என நான் கற்பனைசெய்துகூடப் பார்க்கவேயில்லை; தனது கடிதத்தில் அவள் தன்னைத் தேட முயற்சிக்க வேண்டாம் எனக் குறிப்பிட்டிருந்தாள்; அத்துடன் தான் ஒரு எஃப் எஸ் எல் என் உறுப்பினர் என்பதையும் மிக நளினமாகத் தெளிவு படுத்தியிருந்தாள். சுற்றிவரத் தன்னைத் தேடும் முயற்சியில் நாம் ஈடுபடுவோமேயானால், அவளுக்கு அது தீங்கை விளைவிக்கும் எனக் கூறியிருந்தாள்; ஏனெனில், அந்நாளில் நிக்கரகுவாவில் ஒரு "சன்

டினிஸ்டா'' ஆக இருப்பது வெகு அபாயகரமானதாக இருந்தது.

பின்னேரம் ஐந்து மணியளவில் தான் அவள் வீட்டை விட்டுப் பிரிந்தாள். இன்னும் அச் சம்ப வத்தை என்னால் நன்கு ஞாபகப் படுத்த முடிகிறது, காலையிலேயே அவள் எல்லாவற்றையும் பொதி கட்டியிருந்தாள். தனது டிராய ரைத் (Drawyer) திறந்து ஒரு மோதிரத்தை எடுத்துத் தனது ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளுமாறு என்னிடம் தந் தாள். இம்மோதிரம் அவளது பல்கலைக்கழகக் கல்வியின்போது அவளுக்குப்பரிசாகக் கிடைத்தது. அவளுடைய ஞாபகமாக அவளு டைய பொருட்கள் ஒவ்வொன் றையும் நான் பத்திரப்படுத்தி னேன்; மூன்றரை வயதில் அவள் எழுதிப் பழகிய அப்பியாசக் கொப்பி உட்பட. நான் கற்பனை செய்துகூடப் பார்க்கவேயில்லை; ஆம், அவள் எம்மைப் பிரிந்து எங்கோ செல்கிறாள் என்பதை அப்போதும்கூட நான் எதிர்பார்க் கவேயில்லை.

ஒருமுறை அவள் தன் பல்கலைக் கழக விடுமுறையின்போது ஒரு கதை ஒன்றை எழுதியிருந்தாள்; அப்போது அவள் ஒரு மருத்துவக் கல்லூரி மாணவி, ''வெலஸ் பெயில்'' மருத்துவசாலையில் மகப் பேற்றுப் பிரிவில் அவளது சிநே கிதியாக இருந்த ஒரு வைத்தியர் மூலமாக அம்மகப்பேற்றுப் பிரி விலேயே வேலை எடுத்திருந்தாள். ஒருநாள், அவள் வைத்தியசாலை யில் இருந்து திரும்பியபோது மிக வும் பரபரப்பாகக் காணப்பட் டாள்; ஏனெனில், அன்றுதான் ஒரு பிரசவத்தின்போது,ஒருபுதிய உயிரை உலகுள் அழைத்து வரும் வைத்தியராகத் தனது முதலா வது அனுபவத்தைப் பெற்றிருந் தாள். இவ் அனுபவத்தைப்பற் றியே அவள் அக்கதையை எழுதி யிருந்தாள். தலைமறைவாகி எம் மைப் பிரிந்து செல்கையில் இக் கதையை வியோனில் தங்கி யிருந்த வீட்டில் எமக்காக விட்டுச் சென்றிருந்தாள். அதில் ''அப்பா அம்மா நீக்ரோவிற்கு'' ''அன்பு டன் டோரா'' என எழுதப்பட்டி ருந்தது. எப்பொழுதும் அவள் தன் தம்பியைச் செல்லமாக ''நீக்ரோ'' என்றே அழைப்பாள்.

அவள் தலைமறைவாகிச் செல் வதற்குரிய காரணத்தை நாங்கள் ஆதரித்தோம்; அதற்குரிய உதவி களை நல்கினோம். ஆனால் இது அவள் எம்மைவிட்டுப் பிரிந்ததை யிட்டு, நாங்கள் அதிர்ச்சியடைய வில்லை என்பதைக் கருதவில்லை. அவள் ஒரு இருபது வயது நிரம் பிய சின்னக் குழந்தையாகவே எமக்குத் தெரிந்தாள்; அவள் எங்கு செல்லுள் என்பதுபற்றி ஏறத்தாழ இரண்டரை வருட காலமாக எமக்குத் தெரியவே யில்லை; இதன்பின் அவள் கோட் டைத் தாக்குதலில் அவள் ஈடு பட்டபோதுதான் அவள் எங்கி ருக்கிறாள் என்பது எமக்குத் தெரி யவந்தது. அவள் இதற்கு முன் நிக்கரகுவாவிலேயேதான் இருந்தி ருந்தால் கூட எமக்குத் தெரிந் திராது. ஏனெனில் அவளைப்பற் றிய எந்தவொரு குறிப்போ, செய்தியோ எதுவுமே எமக்குக் கிடைக்கவில்லை.

அவ்வேளையில் அவளைப்பற்றி எதுவுமே தெரிந்திராத நிலையில் நான் எவருமே கற்பனை செய்ய இயலாத மிகுந்த வேதனையை அனுபவித்து வந்தேன்.ஒவ்வொரு நாள் காலையும் அதிகாலையில் எழுந்து, முன் கதவருகே எனக்கா கத் தன்னைப்பற்றிய ஒரு சிறிய குறிப்பை விட்டுச் சென்றிருக்கி றாளா என ஆவலோடுதேடுவேன்; ஆனால் அவள் அங்ஙனம் வருவது எவ்வளவு பயங்கரத்தை விளைவிக் கும் என்பதையும் நான் உணராம லில்லை. ஒவ்வொருநாளும் தேடி யும் எதுவுமே எனக்குக் கிடைக்க வில்லை. அவள் உண்ணுகிறாளா? உயிருடன் இருக்கின்றாளா? எங்கே எங்கே அவள்? என்ன செய்து கொண்டிருக்கிறாள்? என என் னுள்ளே பல பல வினாக்கள் அவள் தன்னைப்பற்றி ஒரு சிறிய குறிப்பைத் தந்திருந்தாலே நான் இங்ஙனம் அங்கலாய்க்காது இருந் திருப்பேன். ''அம்மா நலமாக இருக்கிறேன்'' என்று குறிப்பிட் டிருந்தால் அதுவே எனக்குப் போதுமானதாக இருந்திருக்கும்; ஆனால் துரதிர்ஷ்டவசமாக எது வுமே இல்லை, இவைதான், இப் படித்தான் அவளைப்பற்றி எது வுமே அறியாது அவ் இரண் டரை வருடகாலமும் நான் அனு பவித்த வேதனைகள்.

கோட்டைத் தாக்குதலிற்கு எட்டு மாதங்களின் முன்னர் எமது மகள் வடக்கு மலைப்பகுதி களில் காணப்படுவதாகப் பிறர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கி றோம். இச்செய்தியை எமக்குக் கூறிய பெண் ''டோரா'' என்ற எனது மகளின் பெயரைக் குறிப் பிடவில்லை. ஆனால் அவள் விப ரித்தவற்றிலிருந்து அது டோரா வாக இருக்கலாம் என்று நாம் ஊகித்துக்கொண்டோம். இவ் வேளையில்தான் டோராவின் மர ணத்தைப்பற்றி அரசாங்கப் பத் திரிகைகள் பலமுறை அறிவித்தி ருந்தன. டோரா எம்மைப் பிரிந்து சென்று இரண்டு வருடங் களின் பின்பு எஃப் எஸ் எல் என் இல் உள்ள பெண் ஒருவர் கொல் லப்பட்டிருந்தார். அப்போது பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட படத்தைக்கொண்டு, அது

''டோரா''வா இல்லையா என்பதை என்னால் தெளிவுபடுத்த முடியாமலிருந்தது: ஆனால் சில நாட்களின் பின்பு ஓர் அனுமதேய தொலைபேசி அழைப்பு டோரா மரியாவின் உடலை அடையாளம் காட்ட வருமாறு அழைப்புவிடுத்தது. வானொலி ஒலிபரப்போ ''சில சன்டினிஸ்ட தோழர்கள் இறந்த பெண் டோரா மரியா என அடையாளம் காட்டியதாகக் கூறியது; நான் இச்செய்தி உண்மையா என்பதை அறிய விரைந்தேன், அதிர்ஷ்டவசமாக அது அவளல்ல; மீண்டும் ''எட்காட்லாங்'' சம்பவத்தில் அவள் உயிரிழந்துவிட்டதாக, அறிவித்தனர்; ஆனால் இல்லவே இல்லை; அவள் சாகவில்லை. கடவுளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன்.

எப் எஸ் எல் என் கோட்டையைத் தாக்கியவேளை மூன்று பெண் கொமாண்டோக்கள் அத்தாக்குதல் குழுவில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த மூன்றில் ஒன்று டோராவாக இருப்பது போன்று நான் உணர்ந்தேன்; ஆகவே கெரில்லாக்கள் விட்டு நீங்கும் விமானத் தளத்திற்குக் குடும்பமாகவிரைந்தோம். உண்மையில் அது அவளேதான்! அது எங்கள் டோராதான்! நான் பஸ்ஸில் அவளைக் கண்டேன். பஸ் நிறையக் கெரில்லாக்கள் நிரம்பியிருந்தனர், நான் அருகாய் நடந்தேன்; அவள் தனது முகத்தை மறைத்திருந்தாள். ஆனால் அவளது கண்கள் அவளுக்கே உரிய அக்கண்கள் அவளை எமக்குக் காட்டித்தந்தன; இதன்பின், பனாமாவிலிருந்து தன்னைப்பற்றிய சிறு குறிப்பு ஒன்றினை அவள் எனக்கு அனுப்பியிருந்தாள்.

எமது பிள்ளை உயிருடன் இருக்கிறாளோ, இல்லையோ என்பதை அறியாமல் இருக்கிறபோது, நம் உள்ளம் எப்போதும் ஒரு தீங்கான விளைவையே எதிர்பார்க்கும். இதேபோல்தான், கடந்த சித்திரையில் வியோன் என்ற இடத்தில் கெரில்லாத் தளபதியாக இருந்த 'எவேட்ஸ்' என்பவர் ''எட்காட்லாங்'' சம்பவத்தில், டோரா மரியா இறந்திருப்பதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன எனக் கூறியிருந்தவேளை நான் மிகவும் துயரமுற்றேன்; இச்சம்பவத்தில் சடலங்களைப் பார்ப்பதற்காக வியோனிற்குச் சென்றேன். ஆனால் நான் செல்வதற்கு முன்பாகவே சடலங்களைப் புதைத்துவிட்டிருந்தனர், நான் மயானத்திலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும்போது, இச்சம்பவத்தில் இறந்துபோன ஒருவரின் சகோதரியை நான் சந்தித்தேன். அவர் டோரா மரியா இச்சயபவத்தில் இறந்துபோகவில்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

இதன்பின், சிறிது காலத்தில் இறுதித் தாக்குதல் ஆரம்பமாகியது; எப் எஸ் எல் என் தலைநகரை ஆக்கிரமித்தபோதுதான் டோரா மரியா வியோனில் தான் தங்கியிருந்தாள் என்பது எமக்குத் தெரியவந்தது. ரேடியோ சன்டினோ தனது ஒலிபரப்பில் பின்வருமாறு கூறியது. ''கோட்டை மீதான தாக்குதலில் பங்குபற்றிய டோரா மரியா ரெலஸ் இன்று தளபதி பற்றீசியா என அறியப்படுபவர், வியோன் நகரை கைப்பற்றியுள்ளார்'' இதன்பின் மேலும் நாங்கள் பீதியடைந்தோம். ஏனெனில் இன்னமும் இவற்றைக் கையாள்வதற்குரிய அரசபடையினர் வியோனில் நிலைகொண்டிருந்தனர். நாங்கள் டோரா மரியாவைப் பெற்றவர்கள் என்பதால், இவ் அரசபடையினர் எம்மைத் தொந்தரவு செய்யக்கூடும் என நினைத்தோம். ஆனால் கடவுளே என்று அவர்கள் எவ்விதத்திலும் எம்மைத் தொல்லைப் படுத்தவேயில்லை.

அவளைப் பின்பு இறுதியாகக் கண்டபோது அவ்வீட்டில் அவளைக் காண்பதற்காகப் பலர் நிறைந்திருந்தார்கள். அவளை நான் இரண்டு மணியிலிருந்து எதிர்பார்த்தேன்; ஐந்துமணியளவில்தான் அவள் வந்தாள்; பல மக்களிடையே உண்மையில் மிகவும் பரபரப்படைந்திருந்தேன். ஆனால் அவளுடன் கதைப்பதற்கு மிகக் குறுகியகாலச் சந்தர்ப்பமே கிடைத்தது. சில சொற்களுடன் கதை முடிந்துவிட்டது; அவர்கள்

ஆரம்பத்தில் சில நாட்கள் அவளுக்கு கடினமான நாட்களாக அமைந்ததாம். துயரம் முகத்தில் தெரிந்தது. வியோனில் வெகு காலம் தங்கியிருந்ததாலும் நீண்ட நாட்கள் இடம்பெற்ற யுத்தத்தாலும் அவள் சலிப்படைந்திருக்கக் கூடும் ஆனால் இப்போது அவள் அப்படியல்ல.

சென்றுவிட்டார்கள். ஆரம்பத்தில் சிலநாட்கள் அவளுக்கு வெகு கடினமான நாட்களாக அமைந்ததாம். துயரம் முகத்தில் தெரிந்தது, உண்மையில் அது துயரம் அல்ல; அனுபவங்களால் இறுகிப்போன முகம் என்பதும் எனக்குத் தெரிந்தது. வியோனில் வெகு காலம் தங்கியிருந்ததாலும், நீண்ட நாட்கள் இடம்பெற்ற யுத்தத்தாலும் அவள் சலிப்படைந்திருக்கக் கூடும். ஆனால் இப்பொழுது அவள் அப்படியல்ல, நான்கு வருடங்களின் முன் எங்ஙனம் இருந்தாளோ அதே பெண்போலவே, இன்றும் எனக்குத் தோற்றமளிக்கிறாள்.

கட்டுரைக்கான ஆதாரம்:
''சன்டினிஸ்டாவின் புதல்விகள்''
என்ற புத்தகம்


# அவசர தேவைக்கு அவசியமானவை

## குண்டுபாய்ந்த, கத்திக்குத்து காயங்கள்

**தொற்று ஏற்படும் அபாயம்:**

குண்டு பாய்ந்ததாலோ அல்லது கத்திக்குத்தாலோ ஏற்பட்ட எந்த ஆழமான காயமும் ஆபத்தான தொற்றுக்குள்ளாகிற அபாயம் அதிகம் உண்டு. ஆகவே நோயுயிர் முறியை உடனடியாகப் பயன்படுத்தவேண்டும். பெனிசிலின் அல்லது ஆம்பிசிலின் நல்லது. தசை விறைப்பு ஜன்னித் தடுப்பு ஊசிபோட்டுக் கொள்ளாதவர்களுக்குத் தசைவிறைப்பு விஷமுறி ஊசி கண்டிப்பாகப் போடவேண்டும். தசைவிறைப்பு ஜன்னித் தடுப்பு ஊசியும் போடவேண்டும். முடிந்தால் மருத்துவ உதவியை நாடவும்.

குண்டு ஒருவேளை எலும்பைத் தாக்கியிருக்குமானல் எலும்பு முறிந்திருக்கக் கூடும். அடிபட்ட காலோடு நிற்க வைப்பதும், அடிபட்ட கையினுல் எதையும் தூக்குவதும் முறிவை மேலும் மோசமாக்கலாம். முறிவு ஏற்பட்டிருப்பதாகச் சந்தேகப்பட்டால் முறிந்த எலும்புக்கு அணைவரிக்கட்டை வைத்துக் கட்டிவிடவும்.



**கை கால்களில் குண்டு பாய்ந்த காயம்:**

காயத்திலிருந்து ரத்தப்போக்கு அதிகமாக இருந்தால் (பக்கம் 29 இல் கூறியுள்ளபடி) ரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தவும்.

ரத்தப்போக்குக் கடுமையாக இல்லாதபட்சத்தில் சற்று நேரத்திற்குக் காயத்திலிருந்து ரத்தம் வெளியேறினுலும் பரவாயில்லை. இது காயம் சுத்தமாவதற்கு உதவும்.

சோப்பும் கொதிக்க வைத்த நீரும் கொண்டு காயத்தைக் கழுவிச் சுத்தமான கட்டுப்போடவும் குண்டு பாய்ந்த காயமாக இருந்தால் மேலாகக் கழுவவும். குண்டு பாய்ந்த துளையைத் தோண்டாமல் இருப்பது பொதுவாகநல்லது. நோயுயிர்முறிகளைக் கொடுக்கவும் எச்சரிக்கை

பல வாரங்களுக்குக் காலை அதிகமாக அசைக்காமல் இருப்பது நல்லது. காயம் கடுமையானதாக இருக்கும்போது காயம்பட்ட பகுதியை மார்பை விடச் சற்று உயர்த்தி வைக்கவும். காயம் பட்ட வரை அசையாமல் வைத்திருக்கவும்.


எலும்பு முறிந்திருக்கும் என்று சந்தேகப்பட்டால் அந்தப் பகுதியைப் பிடித்து அமுக்கிவிட வேண்டாம். அப்படிச் செய்தால் அது முறிவை மோசமானதாக்கிக் குணமடைவதைக் கஷ்டமானதாக்கி விடும்.

காயம் கடுமையானதாக இருக்கும் போது காயப்பட்ட பகுதியை மார்பைவிடச் சற்று உயர்த்தி வைக்கவும். காயம் பட்டவரை அசையாமல் வைத்திருக்கவும். (உரு 2)

**மார்பில் ஆழமான காயங்கள்**


மார்பில் ஏற்படும் காயங்கள் மிகவும் ஆபத்தானவையாக இருக்கக்கூடும். உடனடியாக மருத்துவ உதவியை நாடவும்.

காயம் நுரையீரல்வரை ஆழமாக இருந்து சுவாசிக்கும்போது



உரு 1

காயத்திலுள்ள துளையின் வழியாகக் காற்று உள்ளிழுக்கப்பட்டால்










மேற்கொண்டு காற்று உட்செல்லாதபடி காயத்தை உடனடியாக மூடவும் வலைத்துணி மடிப்பில் அல்லது சுத்தமான கட்டுத்துணியில் வாஸலின் அல்லது தாவர எண்ணெய்யைத் தடவிப் படத்தில் (உரு1)காட்டியிருப்பதுபோல் துளையின் மேல் இறுக்கமாகக் கட்டவும்.


உங்களிடம் வாஸலின் அல்லது தாவர எண்ணெய் இல்லாவிட்டால் சுத்தமான துணியைக் கொஞ்சம் துணி மடிப்பில்வைத்து அதைக் காயத்தின் மீது போட்டு இறுக்கமாகக் கட்டவும். இது போன்ற மோசமான நிலைமையில் உடனடியாக மருத்துவ உதவியை நாடவேண்டும். எந்த நிலையில் இருப்பது சௌகரியம் என்று அவர் நினைக்கிறாரோ அந்த நிலையில் அவரை வைத்திருக்கவும்.

அதிர்ச்சிக்கான அறிகுறிகள் இருந்தால் அதற்குரிய சிகிச்சை செய்யவும்.

நோயுயிர் முறிகளும் வலி நிவாரணிகளும் கொடுக்கவும்.

தலையில் குண்டு பாய்ந்த காயம்

★ சுத்தமான கட்டுத் துணி கொண்டு காயத்தைக் கட்டவும்.



★ காயம் பட்டவரை பாதி உட்கார்ந்த நிலையில் இருக்கவைக்கவும்

★ நோயுயிர்முறி கொடுக்கவும் (பெனிசிலின்).

★ மருத்துவ உதவியை நாடவும்.

வயிற்றில் ஆழமான காயங்கள்

வயிற்றைக் கிழித்துக்கொண்டு இரப்பை அல்லது குடல்வரை செல்லுகிற எந்தக் காயமும் ஆபத்தானது. உடன்டியாக மருத்துவ உதவியை நாடவும். இதற்கிடையில்:

சுத்தமான கட்டுத் துணி கொண்டு காயத்தைக் கட்டவும் குடல் வெளியே வந்திருந்தால் சிறிதளவு உப்பு கலந்த கொதி நீரில் நனைத்த, சுத்தமான துணியால் அதை மூடவும். குடலை மீண்டும் உள்ளே தள்ள முயற்சி செய்ய வேண்டாம்.

காயம்பட்டவர் அதிர்ச்சியுற்றிருந்தால் தலைக்குமேல் கால்களை உயர்த்தி வைக்கவும். வாய் வழியாக எதையுமே கொடுக்காதீர்கள். உணவு கொடுக்கக் கூடாது. குடிப்பதற்குத் தண்ணீர் கூடக்

கொடுக்கக் கூடாது. காயம் பட்ட வருக்குத் தாகமாக இருந்தால் ஈரத்துணியைச் சப்பச் செய்யவும்.


வயிறு உப்பியிருந்தாலும், காயம்பட்டவர் பல நாட்களுக்கு மலம் கழிக்காவிட்டாலும் கூட எனிமா கொடுக்கவே கூடாது. குடல் கிழிந்திருந்தால் எனிமா அல்லது பேதிமருந்து அவரைக் கொன்றுவிடக் கூடும்.

நோயுயிர்முறி ஊசிகளைப் போடவும். (விவரங்களுக்குஅடுத்து வரும் பத்திகளைப் பார்க்கவும்)

சுகாதாரப் பணியாளருக்காகக் காத்திருக்க வேண்டாம். காயம் பட்டவரை உடனடியாக அருகாமையிலுள்ள சுகாதார நிலையத்திற்கு அல்லது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும். அவருக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படும்

★ காயத்தின் மேல் தொடர்ந்து அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கவும்.





குடல்வரை சென்றுள்ள காயங்களுக்கான மருந்து:

மருத்துவ உதவி கிடைக்கும் வரை...

4 மணி நேரத்திற்கு ஒருமுறை 1 கிராம் (நான்கு 250 மி. கி. ஆம்ப்யூல்) ஆம்பிசிலின் ஊசி போடவும்.

ஆம்பிசிலின் இல்லாவிட்டால் உடனடியாகப் பெனிசிலின் ஊசி (முடிந்தால் க்ரிஸ்டலேன் பெனிசிலின் போடவும்.

இந்த நோயுயிர் முறிகள் ஊசி மருந்துகளாகக் கிடைக்காவிட்டால் சிறிதளவு தண்ணீருடன் ஆம்பிசிலின் அல்லது பெனிசிலினை க்ளோரம்ஃபினிக்கால் அல்லது டெட்ராசைக்ளினேடு சேர்த்துச் சாப்பிடக் கொடுங்கள். (குடல்வால் நோய்க்கும் பெரிடோனிடிசுக்கும் இந்த மருந்துகளைக் கொடுக்கலாம்).

காயத்திலிருந்து வரும் ரத்தப் போக்கைக் கட்டுபபடுத்துவது எப படி?

1. காயப்பட்ட இடத்தைச் சற்று உயர்த்திப் பிடிக்கவும் (ரத்தப் போக்கைக் குறைக்க).

2. சுத்தமான ஒரு துணியை (துணி எதுவும் இல்லாவிட்டால். உங்கள் கையை) நேரடியாகக் காயத்தின் மீது வைத்து ரத்தப் போக்கு நிற்கும்வரை அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கவும் 15 நிமிடமே சில சமயங்களில் ஒருமணி நேரமோ அல்லது அதற்கும் அதிகமாகவோ கூட இவ்வாறு செய்யவேண்டி இருக்கலாம்


3. காயத்தின் மீது அழுத்திப் பிடித்தும்கூட ரத்தப்போக்குக் கட்டுப்படாமல் ரத்தம் மிகுதியாக வந்துகொண்டிருந்தால்:

★ அடிபட்ட பகுதியை எவ்வளவு முடியுமோ அவ்வளவு உயர்த்திப் பிடிக்கவும்.

★ கையில் அல்லது காலில் காயம் பட்டிருந்தால், காயத்திற்குச் சற்றுத் தள்ளி மேல் பகுதியில் கட்டுப் போடவும். ரத்தப் போக்குக் கட்டுப்படும் வகையில் கட்டை இறுக்கவும். கை அல்லது கால் நீலமாக மாறும் அளவுக்குக் கட்டை இறுக்கவேண்டாம்.

★ கட்டுப் போடுவதற்கு மடித்த துணியையோ அல்லது அகலமான 'பெல்ட்'டையோ

பயன்படுத்தவும். மெல்லிய கயிறு, நைலான், பிளாஸ்டிக் கயிறு முதலியவற்றை ஒரு போதும் பயன்படுத்தக் கூடாது.



முக்கியமாகக் கவனிக்க வேண்டிய வை:

★ நேரடியாகக் காயத்தின் மீது அழுத்திப் பிடித்தும் கட்டுப் படுத்த முடியாத அளவு ரத் தப் போக்குக் கடுமையாக இருந்தால் மட்டுமே கட்டுப் போட வேண்டும்.

★ கட்டு இன்னும் அவசியமா என்று தெரிந்துகொள்வதற் கும், ரத்த ஓட்டத்திற்கு ஏது வாகவும் அரைமணி நேரத் திற்கு ஒருமுறை கட்டைச் சற்றுநேரம் தளர்த்திவிடவும் வெகு நேரம் கட்டை அவிழ்க் காமல் விட்டுவிட்டால் கை யையோ காலையோ அகற்ற வேண்டிய அளவுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

★ ரத்தப்போக்கை நிறுத்த ஒரு போதும் மண், சாணம், மண் ணெண்ணெய், சுண்ணும்பு, அல்லது காப்பிப் பொடியைப் பயன்படுத்தாதீர்கள்.

★ காயம் அல்லது ரத்தப்போக்கு கடுமையானதாக இருந்தால் அதிர்ச்சி ஏற்படுவதைத் தடுக் கப் பாதத்தை உயர்த்தித் தலையைத் தாழ்வாக வைக்க வும்.


அதிர்ச்சி

அதிர்ச்சி என்பது உடலின் ரத்த அழுத்தம் அபாயகரமான அளவுக்குக் குறைந்து விடும் போது தோன்றும் உயிருக்கே ஆபத்தான நிலை. இது கடுமை யான வலி, பெரிய தீக்காயம், அதிகமான ரத்த இழப்பு, கடு மையான நோய், நீரிழப்பு அல் லதுகடுமையான ஒவ்வாமைஎதிர் வினைவு காரணமாக நேரக் கூடும்.

**அதிர்ச்சிக்கான அறிகுறிகள்:**

★ மயக்கத்திற்குப் பிறகு, குறிப் பாக எழுந்து நிற்கும் போது ஏற்படும் சோர்வு.

★ வாந்தி வருவது போன்ற உணர்வு.



★ தோலில் பிசுபிசுப்பு.

★ குளிர்ந்த சீதோஷ்ணத்திலும் அதீத வியர்வை.

★ கடுமையான தாகம்.

★ ஆருட்டம், மனக் குழப்பம் அல்லது நினைவு இழத்தல்.

★ தளர்ந்த வேகமான நாடித் துடிப்பு (நிமிடத்திற்கு 100 துடிப்புக்கும் மேல்.)

**அதிர்ச்சியைத் தடுப்பதும் மருத்து வம் செய்வதும் எப்படி?**

அதிர்ச்சியின் அறிகுறி தென் பட்டவுடன் அல்லது அதிர்ச்சி ஏற்படக் கூடிய அபாயம் இருக் கும் போது

★ படத்தில் காட்டியிருப்பது போல், தலையை விடக் கால் கள் உயரத்தில் இருக்கும்படி யாக நோயாளியைப் படுக்க வைக்கவும். தலையில் அடிபட்ட தால் ஏற்பட்ட அதிர்ச்சியாக இருந்தால் கால்களை உயர்த்த வேண்டாம். காலை மடக்கிக் கொண்டு உட்கார வைக்கவும். (தலையணையில் சாய்ந்து பாதி உட்கார்ந்தநிலை.)

★ நோயாளிக்குக் குளிர் எடுத் தால் போர்த்தி விடவும்.

★ அவர் உணர்விழக்காமல் இருந் தால் வெந்நீர் அல்லது வெது வெதுப்பான பானங்கள் கொடுக்கவும். காயத்தின் (விபத்து,குத்துப்பட்ட காயம்) காரணமாக அதிர்ச்சி ஏற்பட் டிருந்நால் குடிக்க எதுவும் கொடுக்கவேண்டாம்.அவருக்கு அறுவைச் சிகிச்சை தேவைப் படலாம். உடனடியாக மருத் துவ உதவி பெறவும்.

★ அவருக்கு வலி இருந்தால் ஆஸ்பிரின் அல்லது வேறு வலி நிவாரணி கொடுக்கவும்.

★ அவரை ஆசுவாசப்படுத்தி அமைதியாக இருக்கச் செய்யவும்.

நோயாளி நினைவிழந்திருந்தால்:

★ தலை தாழ்வாக இருக்கும்படி ஒரு பக்கமாகச் சாய்த்துப் படுக்க வைக்கவும். அவருக்கு மூச்சுத்திணறல் இருந்தால் உங்கள் விரல்களைக் கொண்டு அவர் நாக்கை லேசாக முன் பக்கம் இழுக்கவும்.

★ அவர் வாந்தி எடுத்திருந்தால் வாயை உடனடியாகச் சுத்தம் செய்யவும். வாந்தி நுரையீரல்களுக்குள் செல்லாமல் இருக்கத் தலை தாழ்வாகவும், பின்பக்கம் சாய்ந்தும், ஒரு பக்கமாக இருக்குமாறும் பார்த்துக் கொள்ளவும்.

★ நினைவு திரும்பும் வரை வாய் வழியாக எதுவும் கொடுக்க வேண்டாம்.

★ உங்களுக்கோ வேறு யாருக்கோ சிரை வழிக் கரைசல் (சாதாரண உப்பு நீர்) எப்படிக் கொடுப்பது என்பது தெரிந்திருந்தால், அது உடலுக்குள் வேகமாகச் செல்லுமாறு செலுத்தவும்.

★ உடனடியாக மருத்துவ உதவியை நாடவும்.

நினைவிழத்தல்:

நினைவிழத்தலுக்கான பொதுவான காரணங்கள்:

★ குடிபோதை

★ தலையில் அடிபடுதல்

★ அதிர்ச்சி

★ உடலில் விஷம் கலத்தல்

★ நீரிழிவு

★ மயக்கமடைதல் (பீதி, பலஹீனம்முதலான காரணங்களால்

★ வேனல் அதிர்ச்சி

★ பாரிச வாயு

★ மாரடைப்பு

★ காக்காய் வலிப்பு

ஒருவர் நினைவிழந்தது எதனுல் என்று தெரியா விட்டால்:

1. அவர் சுவாசம் ஒழுங்காக இருக்கிறதா என்று பார்க்கவும். இல்லை என்றுல் அவருடைய தலையைப் பின் புறம் நன்றுகச் சாய்த்துத் தாடையையும் நாக்கையும் முன்னுக்கு இழுக்கவும். அவர் தொண்டையில் ஏதாவது அடைத்துக் கொண்டிருந்தால், அதை வெளியே எடுத்துவிடவும். அவர் சுவாசிக்காமல் இருந்தால் உடனடியாக வாய்க்குள் வாய் சுவாச முறையை மேற்கொள்ளவும்.

2. ரத்தம் அதிக அளவில் வெளியேறிக் கொண்டிருக்கிறதா என்பதைக் கவனிக்கவும். அதனை உடனே கட்டுப்படுத்தவும்.

3. அவர் அதிர்ச்சி அடைந்த நிலையில் இருக்கிருரா என்று பாருங்கள். (பிசுபிசுப்பான வெளிறிய தோல்; தளர்ந்த வேகமான நாடித்துடிப்பு.) அப்படி இருந்தால் கால்களை விடச் சற்றுத் தாழ்வாகத் தலை இருக்கும்படி படுக்க வைக்கவும். ஆடைகளைத் தளர்த்தி விடவும்.

4. வேனல் அதிர்ச்சியாக இருக்கக் கூடுமா என்று பார்க்கவும். (வியர்க்காதிருத்தல், கடுமையான காய்ச்சல், சூடான சிவந்த தோல்.) அப்படியிருந்தால் அவர் மீது வெயில் படாதவாறு செய்யவும். கால்களைவிடத் தலை உயர்ந்து இருக்குமாறு வைக்கவும். குளிர்ந்த நீரை (முடிந்தால் ஐஸ் நீரை) உடல் மீது தெளிக்கவும்.

ஒருவர் மோசமாகக் காயமடைந்திருந்தால் நினைவிழந்திருக்கக் கூடுமானுல்:

நினைவு திரும்பும் வரை அவரை நகர்த்தாமல் இருப்பது மிகவும் நல்லது. அவரை நீங்கள் நகர்த்த வேண்டியதிருந்தால் மிகுந்த கவனத்துடன் அதைச் செய்யவும். ஏனென்றுல் அவருடைய கழுத்தில் அல்லது முதுகில் எலும்பு முறிந்திருந்தால் அவரை இருக்கும் நிலையிலிருந்து மாற்றுவது அவர் நிலையை மோசமாக்கக் கூடும்.

காயங்கள், எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று கவனிக்கவும். மிகவும் அவசியமான நிலையில் மட்டுமே அவரை நகர்த்தவும். கழுத்து அல்லது முதுகு வளையாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

நினைவிழந்த நிலையிலிருக்கும் ஒருவருக்கு ஒருபோதும் வாய் வழியாக எதையும் செலுத்தாதீர்கள்.

---

சந்தர்ப்பவாதிகள் புரட்சிகரக் கோட்பாடுகளை வெறும் வரட்டுத் தத்துவமாகக் கருதுகின்றுர்கள். அவர்கள் புரட்சிகரக் கருத்துக்களை பேசுவார்கள். சந்தர்ப்பவாதத்தை நடைமுறைப்படுத்துவார்கள். பிறருக்கு புரட்சிகரக் கருத்துக்களையும் தமக்கு சந்தர்ப்பவாதத்தையும் பயன்படுத்துவார்கள்.

— மாஓ —

# இலங்கைப் பிரச்சினையும்..

4-ம் பக்கத் தொடர்ச்சி

டைவால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகுதல். இரண்டாவது தந்திரோபாயம் இவ்வியக்கங்கள் சோஷலிசத் தமிழீழ அரசை அமைக்கக்கூடியளவு பலம்பெருது செய்தல் என்பதாகும். உலகிற் புரட்சி இயக்கங்களை நசுக்குவதற்கு அமெரிக்கா கையாளும் ஒரு முறையைச் சில மாற்றங்களுடன் இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பொறுத்துக் கையாள்கின்றது. அமெரிக்கா கையாளும் முறையை இங்கு நோக்குவோம்,

ஒரு நாட்டில் புரட்சிகர இயக்கம் ஏதும் தோன்றும் போது அதனைத் தோற்கடிப்பதற்குரிய இலகுவான வழியிலொன்று அவ்வியக்கத்தை முதிர்ச்சியற்ற ஓர் வளர்ச்சிக்குத் தள்ளுதலாகும். ஒரு இயக்கம் படிப்படியாக நாளாந்த அனுபவங்களுக்கூடாக ஒழுங்காக வளர்வதன் மூலம் அவ்வியக்கம் சரியான பாதையில் ஸ்திரமடைந்துவிடும். இயக்கத்தை ஸ்திரமாக வளரவிடாமற் தடுப்பதற்குரிய ஒரு வழி இயக்கத்தை குழப்பமான முறையிற் திடீரென்று வளரவைப்பதாகும். இதற்கான ஒரு வழி இயக்கத்திற்கு திடீரென நிதி உதவி செய்தலும், ஆயுத உதவி செய்தலுமாகும். இயக்கத்தை சிறிது காலம் நீளக்கயிற்றில் ஓடவிடுமாறு அந் நாட்டின் அரசாங்கத்திற்கு அமெரிக்கா ஆலோசனை வழங்கும். மறுபுறம் சி.ஐ.ஏ. ஏதாவது மனித உரிமை நிறுவனம் ஒன்றுக்கூடாக குறிப்பிட்ட இயக்கத்திறகு நிதி உதவியை வழங்கும். காசு கிடைத்ததும் 50 அங்கத்தவரைக் கொண்டிருந்த இயக்கம் திடீரென 5,000 பேராக மாறும். நிதானமற்ற இத் திடீர் வளர்ச்சி இயக்கத்துக்குள் ஒழுங்கின்மையைக் கொண்டுவரும். குழப்பத்தை கொண்டுவரும். கட்டுக்கோப்பைக் குலைக்கும் இயக்கம் ஸ்திரமடையாது. ஆனால் வீங்கிப் பெருத்திருக்கும். இயக்கம் தான் குழம்பிய நிலையில் குழப்பகரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும். இதனால் இயக்கம் தானும் குழம்பி மக்களையும் குழப்பும். இத்தகைய சூழ்நிலையில் அரசு இயக்கங்கள் மீது தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டால் அவ்வியக்கத்தை குறைந்தது பல வருடங்களுக்காவது பின்தள்ளி விடுவது சாத்தியப்பட்டுவிடும். சோஷலிசம் என்பது ஒரு விதி; அது ஒரு ஒழுங்கமைப்பு; அது ஒரு கட்டுக்கோப்பு. இதனை எதிரி நன்கு விளங்கியிருக்கிறான். எனவேதான் இதற்கு அடிப்படையான ஸ்தாபனக் கட்டுக்கோப்பைக் குலைத்து விடுவதில் எதிரி பாரிய கவனம் செலுத்துகிறான்.

அமெரிக்காவின் இத்தந்திரத்தைத்தான் தமிழீழப் போராட்ட இயக்கங்கள் பொறுத்து இந்தியா கையாள்கின்றது. 1983 யூலை தமிழின ஒழிப்புக் கலவரத்தைத் தொடர்ந்து திடீரென இயக்கங்கள் வீங்கிப் பெருப்பதற்கான ஓர் அடிப்படை வசதி ஏற்பட்டது. எந்தொரு இயக்கமும் தனிப்பெரும் வளர்ச்சி அடையமுடியாதவாறும், ஒன்றுக்கொன்று ஏறக்குறைய சமனான வளர்ச்சியை அடையக்கூடியதுமான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்களை ஏறக்குறைய சமவளர்ச்சியில், அல்லது ஒரு இயக்கத்தை மற்றைய இயக்கம் குழப்பக்கூடியதான வளர்ச்சியில் வைத்திருத்தல் என்ற வகைகளிற் திட்டமிடப்படுவதுண்டு. இயக்கத்துள் குழப்பம், இயக்கங்கள் இடையேயான பகைமை ஆகிய இரண்டும் போராட்டத்தை ஒட்டுமொத்தமாகக் குழப்பிவிடக்கூடியவை. இலங்கையைப் பொறுத்தவரையில் தனிமைப் படுத்தப்பட்டுவரும் அரசைக் குழப்புவதற்கு குழப்பமான இயக்கங்களே போதுமானதென்பது இந்தியாவின் கணிப்பீடாகும். சுருக்கமாகச் சொல்வதாயின் இலங்கை அரசுக்கு நெருக்கடியைத் தோற்றுவிக்கக்கூடிய வகையிற் தான் தமிழீழப் போராட்ட இயக்கங்கள் வளர்ச்சி அடைந்திருக்க வண்டுமே தவிர அவை ஆட்சி அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் வளர்ச்சியடையக்கூடாதென்பதே இந்தியாவின் திட்டமாகும்.

இந்நோக்கங்களின் நிமித்தம் இலங்கை ஜனாதிபதி சில அரைகுறை அரசியற் தீர்வுகளுக்கு வர முற்பட்டார். மாகாணசபை என்ற ஓர் போலித்திட்டத்தை முன்வைத்தார். 1957 ஆம் ஆண்டு பௌத்த பிக்குக்களினது ஆதரவுடன் பிரதேசசபைகள் திட்டத்தை எதிர்த்து பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஒழிக்கத் தலைமைதாங்கிய ஜே. ஆர். இப்போது மாகாண சபை திட்டத்தை எவ்வாறுதான் அமுலுக்குக் கொண்டுவர முடியும்? ஐ. தே. க. வுக்குள்ளிருக்கும் பதவிப் போட்டி, எதிர்க்கட்சியினர் ஐ.தே.க. வினை வீழ்த்துவதற்கான ஓர் துருப்பாக இனப்பிரச்சினையைப் பயன் படுத்துதல், பௌத்த நிறுவனம் ஆகிய அனைத்தும் இணைந்து ஜே. ஆர்.

ரின் மாகாணசபைத் திட்டத்தைத் தோற்கடித்தன. இனவாதத்தை வளர்க்கத் தலைமை தாங்கிய ஜே. ஆர். இன்று தானே அந்த இனவாதச் சகதிக்குட் சிக்குண்டு கிடக்கிறார். எதிரி தனது கழுத்திற்தானே சுருக்குப் போட்டுள்ளான் என்பதுதான் இதன் தர்க்கரீதியான வளர்ச்சியாகும். எந்த ஒரு ஆட்சியாளனாலும் இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சுமுகமான அரசியற் தீர்வு காணமுடியாது. பௌத்த நிறுவனத்தையும், இனவாத அரசியல்வாதிகளையும் பலாத்காரமாகத் தோற்கடிப்பதன் மூலமே பிரச்சினையைத்தீர்க்கலாம். தமிழ் மக்கள் போராட்டத்தைச் சரியான முறையிற் திட்டமிட்டு வெற்றிக்கு இட்டுச் செல்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

பொய்யான அரைகுறை அரசியற் தீர்வுக்கு வருவதுகூட தனது ஆட்சியைக் கவிழ்த்துவிடும் என்பது எதிரிக்கு நன்கு தெரியும். எனவே எதிரி அரசியற்தீர்வை கைவிட்டுள்ளார். தீவிர இராணுவ ஒடுக்குமுறையைத் தமிழ் மக்கள் மீது செய்வதன் மூலம் சில வேளை தான் வெற்றியீட்டி விடலாமென்று அல்லது தோற்றாலும் பரவாயில்லை என்றும் எதிரி நினைக்கிறான். இந்த வகையில் இராணுவ ஒடுக்குமுறை சம்பந்தமாக எதிரி ஓர் தந்திரத்தைக் கையாள்கிறான். அதாவது ஒரே நாளிற் பெருமளவு அழிவு ஏற்பட்டால் பங்களாதேஷில் ஏற்பட்ட அழிவைத் தடுக்க இந்தியப் படை எடுப்பு நிகழ்ந்தது போல் உருவாகி விடுமென்றும், ஒவ்வொரு நாளும் சிறு சிறு தொகையாக அழிவை ஏற்படுத்தினால் அதனை ஓர் சர்வசாதாரண நிகழ்ச்சியாக்கி விடலாமென்றும் எதிரி எண்ணிச் செயற்படுகின்றான். அத்துடன் மக்களிற்கு போராட்டத்தில் விரக்தியை ஏற்படுத்திவிட வேண்டுமென்றும் முயற்சிக்கிறான்.

சிங்கள இனவாத அரசின் பலத்தைப் பற்றி இந்தியாகூட சரியான முறையில் எடைபோட்டுள்ளதா என்பது கேள்விக்குறியே. எதிரியின் பலம் இனவாதத்தை மக்கள் மயப்படுத்தியுள்ளமையிலேதான் இன்று பெரிதும் தங்கியுள்ளது. ஆனபடியால் இந்தியா தனது சர்வதேச அந்தஸ்தைப் பேணிக்கொண்டு இலங்கைப் பிரச்சனையைத் தீர்த்தல் என்பதில் பல சிக்கல்களை இன்று எதிர் நோக்குகின்றது. பிரச்சினை ஓர் எல்லையைத் தாண்டும்போது இந்தியா இந்திய இராணுவமென்ற பெயரில்லாத ஓர் இராணுவ நடவடிக்கையின் மூலம் இலங்கையில் ஏதோ ஒரு வகையில் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்கான ஓர் திட்டத்தையே வைத்திருக்கக் கூடும். தற்போதைய சூழ்நிலையில் இலங்கைப் பிரச்சினையை இந்தியா இழுத்தடிப்பதில் ஈடுபட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் நாங்கள் சரியென்றால் எங்களை நாங்களே நிர்ணயிக்கலாம். இந்தியாவின் உதவியைப் பெறலாம். ஆனால் எங்களை நாங்களே நிர்ணயிக்கவேண்டும். தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவிற்கு ஒரு முற்போக்கான பாத்திரமுண்டு. அவற்றை விளங்கி அவற்றிற்கு நாம் ஆதரவளிக்கவேண்டும். அதேவேளை பிற்போக்கான நடவடிக்கைகளுக்குள் நாம் சிக்குண்டு போய்விடக்கூடாது. இதிற் சரியான கண்ணோட்டமும் சரியான திட்டமிடலும் இருக்க வேண்டும்.

சகல தடைகளையும் தாண்டி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வெற்றியீட்டுவதற்கான சில சூழ்நிலைகளும், வாய்ப்புகளும் நிலவுகின்றன. இதற்கான ஒரு வேலைத்திட்டத்திற்கே நாங்கள் முதன்மை கொடுக்க வேண்டும். நாம் எதிர்நோக்கும் தடைகளை உடனடியாகத் தாண்டிவிட முடியாது. எமது போராட்டம் சற்று நீளமானது. நாம் நிச்சயமாக இதில் வெற்றியீட்ட முடியும்.

(இக்கட்டுரையிற் சில பிரச்சனைகளின் போக்குகளே விளக்கப்பட்டுள்ளன. முதலில் இதனையிட்டு அனைவரும் ஆழமாகச் சிந்திக்கவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.)

காலேஜு மாணவர் முதல்
டீனேஜு பாவையர் வரை
பல்லுள்ள பாப்பா முதல்
பல்லில்லா தாத்தா வரை
எல்லோருக்கும் இன்பம் தரும்

# அண்ணா டொபிகள்

அண்ணா டொபி
அண்ணா பட்டர்ஸ் கொச்
அண்ணா பார்லி சுகர்,
லொலி பொப்ஸ்
பெப்பர் மிண்ட்

இன்னும்

இதே போன்ற மற்றும்
அண்ணா தயாரிப்புகளுக்கு
நாடுங்கள்

## அண்ணா தொழிலகம்
## இணுவில்

கிளை II

நடராசா பிறதேஸ்
K. K. S ரோட்
இணுவில்